தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் பல்கலை: இளங்கலை படிப்புக்கு சேர்க்கை




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் மே 12-ஆம் தேதி முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வரும் கல்வியாண்டில் (2014-15) இளங்கலை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை குறித்த அறிவிப்பு மே 2-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதிக்குள் வெளியிடப்படும். இளங்கலை படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் மே 12-ஆம் தேதிமுதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

உறுப்புக் கல்லூரிகளில் 1,040 இடங்களும், இணைப்புக் கல்லூரிகளில் 780 இடங்களும் என மொத்தம் 1,820 இடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது. பிளஸ் 2 தேர்வில் பெற்ற மதிப்பெண்களை கொண்டு தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர். மாணவர் சேர்க்கை ஒற்றைச் சாளர முறையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும். இக்கல்வியாண்டில்

ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதன்படி வேளாண்மைப் பல்கலைக்கழக இணையதளத்திற்குச் சென்று (www.tnau.ac.in/admission.html) விண்ணப்பத்தை அத்தளத்திலேயே பூர்த்தி செய்து, பதிவு செய்ய வேண்டும். சிறப்பு இட ஒதுக்கீடுகளுக்கான முன்னாள் ராணுவத்தினர் வாரிசுதாரர், சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர், விளையாட்டு வீரர்கள் பிரிவில் விண்ணப்பிப்போர் பூர்த்தி செய்த விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதனுடன் தேவையான சான்றிதழ்களை இணைத்து முதன்மையர் (வேளாண்மை) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 641003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை இணையதளத்தில் பதிவு செய்தபின், விண்ணப்பக் கட்டணம் பொதுப் பிரிவினருக்கு ரூ.600, எஸ்.சி., எஸ்.சி.ஏ., எஸ்.டி. பிரிவினருக்கு ரூ.300-ஐ கிரடிட் கார்டு அல்லது டெபிட் கார்டு மூலம் செலுத்தலாம். இந்த வசதி இல்லாதவர்கள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வங்கி ரசீது (செலான்) மூலம் எந்தவொரு ஸ்டேட் வங்கி கிளையிலும் கட்டணத்தைச் செலுத்தலாம்.

உத்தேச மாணவர் சேர்க்கை விவரம்

1. இளங்கலை படிப்புகளுக்கான சேர்க்கை விவரம் பத்திரிகைகளில் வெளியீடு- மே 2 முதல் மே 12-ஆம் தேதிக்குள்.

2. இணையதள விண்ணப்பம் துவங்கும் நாள் - மே 12.

3. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்த விண்ணப்பங்களைப் பெற கடைசி நாள் - ஜூன் 7.

4. தரவரிசை பட்டியல் வெளியீடு - ஜூன் 16.

5. முதல்கட்ட கலந்தாய்வு (பொதுப் பிரிவு), சிறப்பு ஒதுக்கீடு, தொழில் கல்விக்கான கலந்தாய்வு - ஜூன் 30 முதல் ஜூலை 9-ஆம் தேதி வரை.

6. இரண்டாம் கட்ட கலந்தாய்வு - ஜூலை 14 முதல் 17-ஆம் தேதி வரை.

7. கல்லூரி வகுப்புகள் துவக்கம் - ஜூலை 25. மேலும் விவரங்களுக்கு 0422-6611345, 6611346.

இணையதள முகவரி: www.tnau.ac.in/admission.html

## 3 இடங்களில் 103 டிகிரி வெயில்



**சென்னை,**

தமிழகத்தில் பரமத்தி வேலூர், திருச்சி, திருப்பத்தூரில் வியாழக்கிழமை 103 டிகிரி வெயில் பதிவானது.

அதிகபட்சமாக கரூர் மாவட்டம் பரமத்தி வேலூரில் 103.6 டிகிரி வெயில் பதிவானது. திருச்சி, திருப்பத்தூர் (வேலூர்) உள்ளிட்ட இடங்களிலும் 103 டிகிரி வெயில் சுட்டெரித்தது.

சென்னையைப் பொருத்தவரை 96.8 டிகிரி வெயில் பதிவானது. வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரி, கர்நாடகம், கடலோர ஆந்திரம் மற்றும் லட்சத்தீவில் ஓரிரு இடங்களில் வெள்ளிக்கிழமை (மே 2) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வியாழக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்): பரமத்தி வேலூர்-103.6, திருப்பத்தூர் (வேலூர்) - 103.2, திருச்சி-103.1, சேலம்-102.7, வேலூர் - 102.9, தருமபுரி-102.

மழை: தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் தேனி மாவட்டம் பெரியாரில் அதிகபட்சமாக 80 மி.மீட்டர் மழையும், மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டியில் 70 மி.மீட்டரும், கன்னியாகுமரி மாவட்டம் இரணியல், சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஆகிய இடங்களில் தலா 60 மி.மீட்டரும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி ஆகிய இடங்களில் தலா 50 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

## தமிழகத்தில் மே 4ம்தேதி தொடங்குகிறது அக்னி நட்சத்திரம்

**சென்னை,**

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் வரும் 4ம் தேதி தொடங்கி 28 வரை நீடிக்கிறது. பெரும்பாலான நகரங்களில் இப்போதே வெயில் 1000 டிகிரியை தாண்ட்டியுள்ளது.

வெயிலின் கொடூரத்தால், பகலில் அனல் காற்றும் வீசுகிறது. பகல் வேளைகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்து உள்ளது. இந்நிலையில் நேற்று தமிழகத்தின் தென்மாவட்டங்களில் பல இடங்களில் மழை பெய்துள்ளது. . இந்நிலையில் தமிழகத்தில் இன்று முதல் 3ம் தேதி வரை பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்து உள்ளது.

கோடையின் வெப்பம் வாட்டி வதைக்கும் நேரத்தில் இதுபோன்று பெய்யும் திடீர் மழை மக்கள் மனதுக்கு மகிழ்ச்சையை கொடுக்கிறதது.

எனினும் இந்த ஆண்டு கோடை வெயிலின் வெப்பம் அதிகமாகவே இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூடுபிடித்தது மாம்பழ விற்பனை

**திருவள்ளூர்,**

திருவள்ளூரை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் இருந்து கொண்டு வரப்படும் மாம்பழம் விற்பனை சூடுபிடித்துள்ளது.

கோடை என்றாலே நினைவுக்கு வருவது மாம்பழம். கோடைக்காலம் தொடங்கி சில மாதங்களில் முடிவுக்கு வந்துவிடும் "சீசன் பழம்' என்பதால் எப்போதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மாம்பழத்தின் மீது தனி மோகம் உண்டு.

கடந்த ஒரு வாரமாக திருவள்ளூரில் மாம்பழம் விற்பனை சூடு பிடித்துள்ளது. தற்போது செந்தூரா, பங்கனபள்ளி, ஐவ்வாரி உள்ளிட்ட மாம்பழங்கள் விற்கப்படுகின்றன.திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஏராளமான மாந்தோப்புக்கள் உள்ளன. அந்த தோப்புகளில் இருந்து மாம்பழங்கள் கொண்டு வரப்பட்டு திருவள்ளூரில் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் ஊத்துக்கோட்டை, கும்மிடிப்பூண்டி மற்றும் ஆந்திர

மாநில எல்லையோர கிராமங்களில் இருந்தும் ஏராளமான மாம்பழங்கள் திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது.

இதில் செந்தூரா ஒரு கிலோ ரூ.50, பங்கனபள்ளி ரூ.60 மற்றும் ஜவ்வாரி ரகம் ரூ.80-க்கும் விற்கப்பட்டு வருகிறது. பல மாதங்கள் கழித்து விற்பனைக்கு வந்துள்ள மாம்பழங்களை பொதுமக்கள் பெருமளவில் வாங்கிச் செல்கின்றனர்.

கண்காணிப்பு தேவை: செங்காயாக உள்ள மாம்பழங்களை விலைக்கு வாங்கி வந்து "கார்போஹைட்ரேட்' என்ற சுண்ணாம்புக் கல்லைக் கொண்டு பழுக்க வைத்து சில மாம்பழ மண்டிகளில் விற்பனை செய்யப்படுகிறது.

இதுபோல் கல் வைத்து பழுக்க வைக்கும் பழத்தை சாப்பிடும் நபர்களுக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட உடல் உபாதைகள் ஏற்படுகின்றன.

எனவே சுகாதாரத்துறையினர் அனைத்து மாம்பழ மண்டிகள் மற்றும் கிடங்குகளில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

### மாம்பழ இறக்குமதி மீதான தடையை நீக்க கோரிக்கை

**புது தில்லி,**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அல்போன்சோ மாம்பழத்துக்கு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று ஐரோப்பிய யூனியனிடம் இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய யூனியனின் வர்த்தக ஆணையரான கார்ல் டி கச்ட்டுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கூறியுள்ளதாவது:

ஐரோப்பிய யூனியனின் இந்த நடவடிக்கை ஏற்றுக்கொள்ள இயலாதது. அதிகாரப்பூர்வ கலந்தாலோசனை ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முடிவு ஆச்சரியமளிக்கிறது.

இந்திய அரசால் செயல்படுத்தப்படும் ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகள் அடிப்படையில் தாவர உற்பத்திப் பொருள்களின் தரம் உறுதிப்படுத்தப்படுகிறது.

அத்தகைய உற்பத்திப் பொருள்களை மட்டுமே ஏற்றுமதி செய்ய, வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (ஏபிஈடிஏ) அனுமதி அளிக்கிறது.

ஐரோப்பிய நாடுகளின் குறிப்பிட்ட விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில், அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களின் மீதான கட்டுப்பாடுகளை சமீபத்தில் ஏபிஈடிஏ ஏற்படுத்தியுள்ளது.

இந்திய-ஐரோப்பிய யூனியன் இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக இரு நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுவார்த்தை உறுதியான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

இந்த விவகாரத்தில் எங்கள் கவலையின் தீவிரத்தை கவனத்தில் கொண்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நம்புகிறேன் என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

**திருந்திய நெல் சாகுபடியில் அதிகபட்ச மகசூல்**

**மதுரை,**

திருந்திய நெல் சாகுபடி முறையில் இதுவரை இல்லாத அளவுக்கு, மதுரை மாவட்ட விவசாயி ஹெக்டேருக்கு 24 டன் அறுவடை செய்து சாதனை படைத்துள்ளார்.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள சின்னஇலந்தைக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் சேதுமாதவன். இவர் கடந்த 15 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார். நடப்பு குறுவை பருவத்தில், திருந்திய நெல் சாகுபடி முறையில் ஒரு ஹெக்டேரில் விவசாயம் செய்த இவர், தற்போது 24 டன் அளவுக்கு மகசூல் எடுத்துள்ளார். இது மாநில அளவிலான சராசரிக்கும் அதிகமானதாகும். மதுரை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங்ஞானதுரை உள்ளிட்டோர், நெல் சாகுபடியில் சாதனை படைத்துள்ள விவசாயி சேதுமாதவனுக்கு பாராட்டுத் தெரிவித்தனர்.

இதுகுறித்து விவசாயி சேதுமாதவன் கூறியது:

பெரியாறு பாசனத் திட்டத்தில் நடப்பு ஆண்டிலும் இருபோகத்துக்கும் போதிய தண்ணீர் கிடைக்காது என்பதால், ஒரேபோகமாக நீண்டகால நெற்பயிர் ரகத்தைப்

பயிரிட முடிவு செய்தேன். இந்நிலையில், திருந்திய நெல்சாகுபடி குறித்து வேளாண் அலுவலர்களால் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. இதில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், திருந்திய நெல் சாகுபடியில் சிஆர் 1009 என்ற நெல் ரகத்தை பயிரிட்டு, நெல் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டேன்.

மண்மாதிரி ஆய்வின் அடிப்படையில் ரசாயன உரங்களைப் பயன்படுத்தினேன். ஆனால், அதற்கு முன்பு இயற்கை உரங்களை இட்டு நிலத்தைத் தயார்ப்படுத்தியது அதிக விளைச்சலுக்கு உதவியாக இருந்தது.

வழக்கமாக 90 முதல் 110 நாள்களுக்கான நெற் பயிர் ரகங்கள் பயிரிடப்படுகிறது. அதிக மகசூலைக் கருத்தில் கொண்டு சிஆர்1009 ரகத்தை தேர்வு செய்தேன். இது சற்று பெரிய அரிசி உடைய ரகம் என்றாலும், சன்ன ரக நெல் மகசூலைக்காட்டிலும் பல மடங்கு அதிக மகசூல் கிடைத்திருக்கிறது. இதற்கு முன்பு ஹெக்டேருக்கு 8 டன் வரை மட்டுமே மகசூல் கிடைத்தது. இப்போது, திருந்திய நெல் சாகுபடி முறையில் 24 டன் வரை கிடைத்திருக்கிறது என்றார்.

அதிக மகசூல் எடுத்துள்ளது குறித்து வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை கூறியது: திருந்திய நெல் சாகுபடியில் சராசரியாக ஹெக்டேருக்கு 10 டன் மகசூல் கிடைக்கும். விவசாயி சேதுமாதவனுக்கு, 24 டன் கிடைத்துள்ளது.

வெளிமாவட்ட வேளாண் அதிகாரிகள், முன்னோடி விவசாயிகள் முன்னிலையில் சேதுமாதவனின் நிலத்தில் அறுவடை செய்யப்பட்டு மகசூல் உறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில அளவிலான விளைச்சல் போட்டிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 2013 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம் அண்டமான் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சோலைமலை, அதிக மகசூலுக்காக மத்திய, மாநில அரசுகளின் விருதுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது என்றார்.

**கள்ளிக்குடி வேளாண் விரிவாக்க மையத்துக்கு ஐஎஸ்ஓ தரச்சான்று**

**மதுரை,**

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி வட்டார வேளாண் விரிவாக்க மையத்துக்கு ஐஎஸ்ஓ தரச்சான்று பெறப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் 13 வட்டாரங்களில்

வேளாண் விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம் மையங்களில் அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் மானியத்துடன் கூடிய இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. விதை, உயிர் உரங்கள், நுண்ணூட்டங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் என்பன உள்ளிட்ட பல்வேறு இடுபொருள்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

இதுதவிர விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் விரிவாக்க மையங்களின் வாயிலாக நேரடியாகவும், சிறப்பு முகாம்கள் மூலமாகவும் வழங்கப்படுகிறது.

அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் குறித்த விவரங்கள் வேளாண் விரிவாக்க மையங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் இணைய வசதி மூலமாக வானிலை அறிவிப்பு, விதை உள்ளிட்ட இடுபொருள்கள் இருப்பு விவரம், புதிய ரகங்கள் வருகை போன்றவை குறுந்தகவல்களாக விவசாயிகளின் செல்போன்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

ஒவ்வொரு வேளாண் விரிவாக்க மையத்திலும், வேளாண்சார் சேவைகள் அளிக்கப்படுவதோடு அந்த வட்டாரத்தின் வேளாண்மை தொடர்பான அனைத்து தகவல்கள் சேகரித்து வைக்கப்படுகிறது. இதில் கள்ளிக்குடி வட்டார வேளாண் விரிவாக்க மையம், ஐஎஸ்ஓ 9001:2008 என்ற தரச்சான்றைப் பெற்றிருக்கிறது. இந்த தரச்சான்றை அளிக்கும் டியூவி என்ற அமைப்பு, நிறுவனங்கள் அளிக்கும் சேவையின் தரத்தை மதிப்பீடு செய்து தரச்சான்று வழங்குகிறது.

தமிழகத்திலேயே முதல் முறையாக கள்ளிக்குடி வட்டார வேளாண் விரிவாக்க மையம் ஐஎஸ்ஓ தரச்சான்று பெற்றுள்ளது. இந்த வட்டாரத்தில் மொத்தம் 20,939 விவசாயிகள் இருக்கின்றனர்.

இவர்களுக்கு விவசாயம் சார்ந்த அனைத்து சேவைகளும் வேளாண் விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது. 21 வகையான மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்த சான்று அளிக்கப்பட்டுள்ளது என்று கள்ளிக்குடி வட்டார அட்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர் ராஜசேகரன் தெரிவித்தார்.

## மதுரை: 60 மி.மீ.மழைப் பதிவு

**மதுரை,**

மதுரை நகரில் புதன்கிழமை மாலையில் 60 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. கடந்த சில வாரங்களாக மதுரையில் 100 டிகிரிக்கும் மேலான வெப்பம் நிலவியது. இதனால் குடிநீர் வறட்சியுடன் வெப்பக்காற்றால் மக்கள் அவதியுற்றனர். இதையடுத்து மழைவேண்டி கோயில்களில் வருணஜபம் நடைபெற்றது. வருணஜபம் நடந்த அன்றே வெப்பம் தணிந்து வானில் மேகமூட்டம் தென்பட்டது. சில இடங்களில் தூறலும் இருந்தது.

புதன்கிழமை காலையில் கடும் வெயில் கொளுத்திய நிலையில், மாலையில் திடீரென கருமேகம் சூழ்ந்து இடி,மின்னல், சூறைக்காற்றுடன் மழை கொட்டியது. இரவு வரை நீடித்த மழை மற்றும் இடி மின்னலின்போது மயங்கிய மருத்துவக் கல்லூரி மாணவர் உயிரிழந்தார். ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் மின்சாரம் தாக்கி பெண் உயிரிழந்தார்.

மதுரை மாவட்டத்தில் புதன்கிழமை பெய்த மழை அளவு விவரம் (மில்லிமீட்டரில்): குப்பணம்பட்டி 2, மதுரை 60, சாத்தையாறு அணை 43.2, மேட்டுப்பட்டி 73, கள்ளந்திரி 2, சிட்டம்பட்டி 17.6, புலிப்பட்டி 3, மேலூர் 13.8, தனியாமங்கலம் 25.5, இடையபட்டி 10, விரகனூர் 33.5 என பதிவாகியுள்ளன.

வியாழக்கிழமை வெப்பம் அதிகமில்லை. மாலையில் மேகம் தென்பட்டாலும் மழை இல்லை.

## நத்தத்தில் கேரட் விலை உயர்வு

**நத்தம்,**

நத்தத்தில் உள்ள தினச் சந்தைக்கு, மலைப் பகுதிகளான கொடைக்கானல், ஊட்டி உள்ளிட்ட இடங்களில் இருந்து கேரட் விற்பனைக்கு வருகிறது. ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் கேரட் சீசனாகும். பிப்ரவரி முதல் வாரத்தில் கிலோ ரூ. 25-க்கு விற்பனை செய்யப்பட்ட கேரட், பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் வரத்து குறைவால் கிலோவுக்கு ரூ. 5 வரை அதிகரித்து ரூ. 30-க்கு விற்கப்பட்டது. இந்நிலையில், வெயில் காலம் துவங்கி கேரட் விளைச்சல் குறைந்துள்ளதால், அதன் விலை தொடர்ந்து ரூ. 5 வரை உயர்ந்தே இருக்கிறது. இது குறித்து,

வியாபாரி முத்துமாணிக்கம் கூறியது: டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய குளிர்கால மாதங்கள் மட்டுமே கேரட் சீசனாகும். இம்மாதங்களில் கேரட் விளைச்சல் அதிகமாக இருக்கும். சீசன் முடிவடைந்ததில் இருந்து கேரட் விலை அதிகரித்து வருகிறது. தற்போது, ஒரு கிலோ கேரட் ரூ. 40 வரை விற்பனை செய்யப்படுகிறது. எனவே, பொதுமக்கள் கேரட் வாங்குவதை தவிர்க்கின்றனர் என்றார்.

### நத்தத்தில் கனமழை: பொதுமக்கள் மகிழ்ச்சி

**நத்தம்,**

நத்தம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக கடும் வெப்பம் நிலவி வந்த நிலையில், புதன்கிழமை பிற்பகல் கனமழை பெய்தது. நத்தத்தில் சுமார் 1 மணி நேரத்துக்கும் மேல் தொடர்ந்த கனமழையால், சுற்று வட்டாரப் பகுதிகளில் வெப்பம் தணிந்து, குளுமை நிலவியது. மேலும், செந்துறை, சமுத்திரப்பட்டி, பரளி, சாணார்பட்டி உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது. நீண்ட காலத்துக்குப் பிறகு மழை பெய்துள்ளதால், பட்டுப்போயிருந்த தென்னை, மா உள்ளிட்ட மரங்கள் தளிர்க்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### ஆண்டிபட்டியில் சூறைக் காற்றுடன் கன மழை

**ஆண்டிபட்டி,**

ஆண்டிபட்டி பகுதியில், புதன்கிழமை மாலை சூறைக் காற்றுடன் பலத்த மழை பெய்ததால், வீடுகள் சேதமடைந்தன.

ஆண்டிபட்டி பகுதியில் புதன்கிழமை காலை வெயில் நிலவியது. மாலை 3 மணிக்கு மேல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர், சூறைக் காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால், கொத்தபட்டி மற்றும் சுற்றுப் பகுதிகளில் உள்ள முருங்கை மரங்கள் சாய்ந்தன. மேலும், கொத்தபட்டியில் உள்ள சுப்பம்மாள், சீனி மற்றும் காளிமுத்து ஆகியோரது வீட்டின் மேற்கூரை காற்றில் பறந்து, அருகில் உள்ள மின்மாற்றியில் விழுந்தது. இதனால், அப்பகுதியில் மின்சாரம் தடைபட்டது. ஒரு மணி நேரம் மழை பெய்தது. இந்த மழையால் வெப்பம் தணிந்து, குளுமை நிலவியது. இதனால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**அருப்புக்கோட்டையில் மழை**

**அருப்புக்கோட்டை,**

அருப்புக்கோட்டையில் கடந்த 2 நாள்களாக நல்ல மழை பெய்துள்ளது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்குப் பிறகு இடி மின்னலுடன் மழை பொழிந்தது. இதில் சுமார் அரை மணி நேரம் பெய்த மழை அளவு 37 மி.மீ. எனப் பதிவாகியுள்ளது. மேலும் புதன்கிழமை பகல் 2 மணிக்கு சாரல் மழையாக ஆரம்பித்து தொடர்ந்து இரவு 9 மணி வரை பெய்தது.

இதன் மழையளவு 7 மி.மீ. எனப் பதிவாகியுள்ளது. இதனால் அருப்புக்கோட்டை பகுதியில் குளிர்ச்சியான சூழ்நிலை காணப்படுகிறது.

**மணலூர் பகுதியில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

**திருப்புவனம்,**

மணலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்த இரு வாரங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள் இரவில் தூங்க முடியாமல் தவித்தனர். பகல் நேரங்களில் வெளியில் செல்வோர் நிழல் தரும் மரங்களைத் தேடிச் சென்று இளைப்பாறினர். இந்நிலையில் கடந்த ஒரு சில தினங்களாக திருப்புவனம் பகுதியில் ஓரளவு வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. மேலும் புதன்கிழமை காலையிலிருந்து காற்று சுழற்சி முறையிலும், கருமேகங்கள் அதிகளவில் சூழ்ந்தும் காணப்பட்டது. மாலை திருப்புவனம் அருகே உள்ள மணலூர், தட்டான்குளம், கழுகேர்கடை, அகரம், சக்குடி, அதிகரை உள்ளிட்ட பகுதியிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் கோடை காலங்களில் பயிர் செய்த விவசாயிகளும், கால்நடை வளர்ப்பவர்களும் சற்று நிம்மதி ஏற்பட்டது. இம் மழையினால் தற்போது நீரின்றி வாடும் பயிர்கள் 15 நாள்களுக்கு தாக்குப்பிடிக்கும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். இருப்பினும் மணலூரில் பலத்த மழை திருப்புவனம் , அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் சாரல் மழையாகவே பெய்தது.

**உதகையில் சூறாவளி காற்றுடன் 2 மணி நேரம் பலத்த மழை**

**உதகை,**

உதகையில் கோடை சீசன் தொடங்கி சூடுபிடித்து வரும் சூழலில் வியாழக்கிழமை பிற்பகலில் சூறாவளி காற்றுடன் 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

உதகையில் புதன்கிழமை பிற்பகலில் பரவலாக பெய்த மழையால் சுற்றுலாப் பயணிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். மழையின் காரணமாக இரவில் இதமான காலநிலை நிலவியது. இந் நிலையில் மீண்டும் வியாழக்கிழமை பிற்பகலில் மழை பெய்யத் தொடங்கியது. சில இடங்களில் மழையுடன் ஆலங்கட்டிகளும் கொட்டியுள்ளன. இடி, மின்னல் தொடர்ந்து இருந்ததால், பல்வேறு இடங்களில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

தொடர்ந்து சுமார் 2 மணி நேரத்துக்கு மேலாக பெய்த மழையின் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது. இதனால் சாலைகளில் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. உதகையில் மத்திய பேருந்து நிலையம், ரயில் நிலைய சந்திப்பு, சேரிங்கிராஸ், பொதுப்பணித்துறை அலுவலக சந்திப்பு உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் அதிகளவில் தேங்கி நின்றதால், இப் பகுதிகளிலும் பெரும் போக்குவரத்து தடை ஏற்பட்டது.

பலத்த காற்றின் காரணமாக மரங்கள் வேருடன் சாய்ந்தன. உதகையில் படகு இல்லத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சுற்றுலாப் பயணியின் கார் மீது மரம் விழுந்தது. இந்த விபத்தில் அந்தக் கார் பலத்த சேதமடைந்தது. அதிர்ஷ்டவசமாக யாரும் காயமடையவில்லை. இச் சம்பவத்தால் படகு இல்ல வளாகத்தில் போக்குவரத்து தடை ஏற்பட்டது. தகவலறிந்த தீயணைப்புத் துறையினர் உடனடியாக அங்கு வந்து, அந்த மரத்தை வெட்டி போக்குவரத்தை சீர்படுத்தினர்.

மே தின விடுமுறையையொட்டி, குவிந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் கூட்டத்தாலும், அதிகப்படியான வாகன நெரிசலாலும் சிக்கியிருந்த உதகையில் மழையின் காரணமாக ஏற்பட்ட நெரிசலும் சேர்ந்து கொண்டதால், உதகையில் மாலை 6 மணி வரை தொடர்ந்து போக்குவரத்து நெருக்கடி நிலவியது. உதகையில் கடந்த 2 நாள்களாக தொடர்ந்து பெய்யும் பலத்த மழையின் காரணமாக குடிநீர் ஆதாரங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சி

அடைந்துள்ளனர். அதேபோல, தேயிலை விவசாயிகள் மற்றும் மலைக்காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடத்திலும் இம்மழை பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

### பல்லடம் கறிக்கோழிவிலையில் மாற்றமில்லை

**பல்லடம்,**

பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.75 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால், புதன்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

### ஏலம்: குறைந்தது பருத்தி வரத்து

**அவிநாசி,**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பருத்தி வரத்துக் குறைந்து, ரூ.19.3 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது .

ஏ.சி.எம்.எஸ் ஏல மையத்தில் நடைபெற்ற ஏலத்தில் 900 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன.

குவிண்டால் ஒன்றுக்கு ஆர்.சி.எச். ரகப் பருத்தி ரூ.4800 முதல் ரூ.5,545 வரையிலும், டி.சி.எச் ரகப்பருத்தி ரூ.5,600 முதல் ரூ.6,200 வரையிலும், மட்டரகப்பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,800 முதல் ரூ.35,00 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.10.3 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதில் குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தர்மபுரி, பொம்மிடிப்பூண்டி, அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், கோபி, நீச்சாம்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து 100 பருத்தி விவசாயிகளும், 11 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.53 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42.53 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 838 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 2.88 டி.எம்.சி.

**ஏற்காட்டில் திடீர் மழை**

**ஏற்காடு,**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் வியாழக்கிழமை பிற்பகலில் பலத்த மழை பெய்ததால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கோடை காலம் தொடங்கியதில் இருந்து ஏற்காட்டுக்கு சுற்றுலா வருவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நிலையில், வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் ஏற்காட்டில் சுமார் அரை மணி நேரம் பலத்த மழை பெய்தது. இந்த மழையால் சுற்றுலா வந்திருந்த பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஏற்காடு சேர்வராயன் மலைப் பகுதியில் அடிக்கடி மழை பெய்து வருவதால், காபித் தோட்டங்களில் காபிச் செடிகள் பூக்கத் தொடங்கியுள்ளது.

**தருமபுரியில் பட்டுக் கூடுகள் வரத்து அதிகரிப்பு**

**தருமபுரி,**

தருமபுரி அரசு பட்டுக்கூடு அங்காடியில் பட்டுக் கூடுகள் வரத்து அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் பட்டுக்கூடு பரிவர்த்தனையில் தருமபுரி பட்டுக்கூடு அங்காடி முதன்மையாக உள்ளது.

விழுப்புரம், கன்னியாகுமரி, நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு, உடுமலைப்பேட்டை மற்றும் ஆந்திர மாநிலம் குப்பம், கர்நாடக மாநிலம் கோலார்,

மாலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து நாள்தோறும் சுமார் 60 முதல் 70 பட்டு விவசாயிகளும் 25 முதல் 30 பட்டு நூற்பாளர்களும் தருமபுரி மாவட்ட பட்டுக்கூடு விற்பனை அங்காடியில் நடைபெறும் பட்டுக்கூடு பரிவர்த்தனையில் கலந்து கொள்கின்றனர். இதில், நாளொன்றுக்கு 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் கிலோ பட்டுக்கூடுகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு ஆகிய பட்டுக்கூடு அங்காடிகளில் ஆண்டுக்கு ரூ.15 கோடி மதிப்பில் பட்டுக்கூடுகள் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

தருமபுரி அரசு பட்டுக்கூடு அங்காடிக்கு புதன்கிழமை கூடுகளின் வரத்து அதிகரித்திருந்தது.

விலை உயர்வு: பட்டுக் கூடு வரத்து அதிகரித்த போதிலும் கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதில் கடந்த 15 நாள்களுக்கு முன்பு வெண்பட்டு கூடுகள் கிலோ ரூ. 400 வரை விற்பனையானது. அதேபோல மஞ்சள் பட்டுக்கூடுகள் ரூ.300-க்கும் குறைவாக விற்பனையானது.

தற்போது வெண்பட்டுக் கூடு கிலோ ரூ.483-ம், மஞ்சள் பட்டுக்கூடு கிலோ ரூ.344-க்கும் விற்பனையாகியது.

**மணக்கும் மல்லிகை சாகுபடி**

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி அருகே தினசரி வருவாய் கிடைப்பதால், நெல் சாகுபடி செய்த சிறு விவசாயிகள் மல்லிகைப் பூ சாகுபடிக்கு மாறிவருவது அதிகரித்துள்ளது.

கிருஷ்ணகிரி அருகேயுள்ள காவேரிப்பட்டணம், அவதானப்பட்டி, திம்மாபுரம், தளி அள்ளி, பையூர், பழத்தோட்டம், அதன் சுற்றுப் பகுதி கிராமங்களில் உள்ள சிறு, பெரு விவசாயிகள் அதிகளவு நெல் சாகுபடி செய்தனர்.

தமிழகத்தில், பிற மாவட்டங்களை விட, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி அணையின் சுற்றுப்பகுதி விவசாயிகள் ஆண்டு தோறும் இரண்டு போகம் நெல் சாகுபடி செய்தனர். இதன் மூலம் போதிய வருவாயை ஈட்டினர். இந்த நிலையில், இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாக நெல்

சாகுபடியைக் கைவிட்டு, மல்லிகைப் பூ சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நெல் சாகுபடிக்கு நிலத்தை உழுவது முதல் அறுவடை வரை அதிகளவு செலவு செய்ய வேண்டியதுடன், தொழிலாளர் பற்றாக்குறையால் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க முடியாமல் விவசாயிகள் சிரமமடைந்தனர். உற்பத்தி செலவு ஆண்டுதோறும் அதிகரித்ததால், விவசாயிகள் போதிய வருவாயின்றி பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில், மல்லிகைப் பூ சாகுபடியில், தினமும் பூ பறிப்பதன் மூலம் வருவாய் கிடைப்பதுடன், உற்பத்திச் செலவும் குறைவதால், நெல் சாகுபடி செய்த விவசாயிகள் மல்லிகைப் பூ சாகுபடிக்கு மாறிவருவது அதிகரித்து வருகிறது. ஒரு முறை மல்லிகைச் செடிகளை நடவு செய்தால், ஆண்டில் பத்து மாதம் வருவாய் கிடைப்பதுடன், 30 ஆண்டுகள் வரை தொடர்ந்து வருவாய் ஈட்டலாம் என்பதால், நெல் சாகுபடி விவசாயிகள் மல்லிகை சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

காவேரிப்பட்டணம் அருகேயுள்ள பள்ளிப்பட்டியைச் சேர்ந்த ஜோதி கூறியது:

பல ஆண்டுகளாக நெல் சாகுபடி செய்தோம். நெல் சாகுபடியில் உற்பத்திச் செலவும், வருவாயும் சரி சமமாக இருந்தது. சில நேரங்களில் உற்பத்தி செலவுக்கு கூட கட்டுபடியாகாமல் நஷ்டத்தை சந்திக்க வேண்டியதிருந்தது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நெல் சாகுபடியை விட்டு விட்டு, கால் ஏக்கர் பரப்பளவில் மல்லிகைப் பூ தோட்டம் அமைத்தோம். காலையில் செடியிலிருந்து பூ மொட்டுகளைப் பறிக்க குடும்பத்துடன் சிறிது நேரம் செலவு செய்தால் போதும்.

பராமரிப்பு செலவும் மிகக் குறைவு. குளிர் காலங்களில் மட்டும் பூச்சி தாக்குதல்கள் இருக்கும். அந்த இரண்டு மாதங்கள் மட்டும் வருவாய் கிடைக்காது. மற்ற 10 மாதங்களில் நல்ல வருவாய் கிடைக்கிறது. தினசரி பூ மொட்டுக்களை உள்ளூர் முகவர்கள் வாங்கிச் செல்கின்றனர். தினமும் ரூ.300 முதல் 900 வரை வருவாய் கிடைக்கிறது என்றார்.

அவதானப்பட்டி விவசாயி பழனி கூறியது:

மல்லிகைப் பூ தோட்டம் அமைக்க முன் வரும் சிறு விவசாயிகளுக்கு தோட்டக் கலைத் துறையினர் ஊக்கம் தருவதில்லை.

மல்லிகைப் பூ சாகுபடியில் நல்ல வருவாய் இருந்தபோதும், சிறு விவசாயிகள் இதுகுறித்து அந்த துறை அலுவலர்களிடம் விளக்கம் கேட்டால் பதில் கூற மறுக்கின்றனர்.

ஆனால், பெரும் விவசாயிகளுக்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்கின்றனர் என்றார்.

நெல் சாகுபடியில் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவதால், போதிய வருவாய் இன்றி பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள் மல்லிகைப் பூ சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

இந்த நிலையில், தேட்டக் கலைத் துறையினர் அவர்களுக்கு ஊக்கம் அளித்து அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**திருவாரூர், மன்னார்குடியில் மழை**

**திருவாரூர்,**

திருவாரூர் மற்றும் மன்னார்குடியில் புதன்கிழமை திடீரென மழைப் பெய்து கோடை வெயில் தாக்கத்தில் தவித்த மக்களை மகிழ்ச்சியடைய வைத்தது.

திருவாரூரில் புதன்கிழமை காலையிலிருந்து வெயில் தாக்கம் அதிகம் இருந்தது. ஆனால், மதியம் 12.45 மணியளவில் வானத்தில் லேசான கருமேகம் சூழ்ந்தது.

தொடர்ந்து குளிர்ந்த காற்று பலமாக வீசியது. பின்னர் சிறிது நேரத்தில் மிதமான நிலையில் 15 நிமிடம் மழைப் பெய்தது.

கோடை வெப்பத்தின் தாக்கத்தில் இருந்த மக்களுக்கு இந்த மழை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

மன்னார்குடியில்: புதன்கிழமை மதியம் 1 மணிக்கு வெயிலின் தாக்கம் குறைந்த சில நிமிடங்களில் குளிர்ந்த காற்று வீசியதுடன் சுமார் 30 நிமிடம் மழை பெய்தது. இதனால் நகரில் நிலவி வந்த உஷ்ணம் குறைந்து, மக்களுக்கு வெயிலின் தாக்கத்திலிருந்து சிறிது நேரம் தப்பினர்.

**குமரி மாவட்டத்தில் முந்திரி சீசன்: விலை கிலோவுக்கு ரூ. 60 ஆக சரிவு**

**குலசேகரம்,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரிக் கொட்டை சீசன் தொடங்கியுள்ள நிலையில், விலை கிலோவுக்கு ரூ.60 ஆக சரிவடைந்துள்ளது.

அந்நியச் செலாவணி அள்ளிக்கொடுக்கும் ஏற்றுமதி உணவுப் பொருளான முந்திரி மானாவாரிப் பயிராகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்துப் பகுதியிலும் பரவலாக சாகுபடி செய்யப்பட்ட இந்தப் பயிர், இதரப் பயிர்களின் ஆதிக்கம் காரணமாக இப்போது வெகுவாகக் குறைந்துள்ளது. குறிப்பாக, அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டப் பகுதிகளில் அதிகமாகக் காணப்பட்ட இப் பயிர், ரியல் எஸ்டேட் தொழில் காரணமாக குறைந்துவருகிறது.

மாவட்டத்தில் பேச்சிப்பாறை, ஆறுகாணி உள்ளிட்ட மலைப் பகுதிகளில் பழங்குடி குடியிருப்புப் பகுதிகள் உள்பட குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே இப் பயிர் உள்ளது. புதிதாக முந்திரி சாகுபடி அதிகளவில் நடைபெறவில்லை. தற்போது 1,500 ஹெக்டேர் பரப்பில் மட்டுமே முந்திரி சாகுபடி நடைபெறுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இம் மாவட்டத்தில் முந்திரிக் கொட்டைகளை உடைத்து பருப்பு எடுக்கும் ஆலைகள் ஏராளமாக இருந்தபோதும், அந்த ஆலைகளுக்குத் தேவையான முந்திரிக் கொட்டைகள் உள்நாட்டிலிருந்து கிடைக்காமல் 90 சதவீதம் வரை ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

விலை சரிவு: பொதுவாக முந்திரி அறுவடைக் காலம் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மாதங்களே. மாவட்டத்தில் இப்போது பழங்குடி குடியிருப்புகளிலிருந்து குலசேகரம் சந்தைக்கு அதிகளவில் முந்திரி வரத்து உள்ளது.

கடந்த மாதம்வரை கிலோ ரூ. 80 வரை இருந்த உலர்ந்த முந்திரிக் கொட்டையின் விலை இப்போது படிப்படியாகக் குறைந்து கிலோ ரூ. 60-ஐ தொட்டுள்ளது.

இதுகுறித்து குலசேகரத்தில் முன்னணி மலைப் பொருள் விற்பனையாளர் தங்கராஜ் கூறியதாவது:

மாவட்டத்தில் இப்போது பழங்குடி குடியிருப்புப் பகுதிகளிலேயே அதிகளவில்

முந்திரி மரங்கள் உள்ளன. கடந்த மாதம் உலர்ந்த முந்திரிக் கொட்டைகள் கிலோ ரூ. 80 வரை கொள்முதல் செய்யப்பட்டன.

இப்போது மழையால் ஈரப்பதம் அதிகரித்துள்ளதால் கிலோ ரூ. 60-க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.

முந்திரி மானாவாரிப் பயிராக இருப்பதால் இந்த விலை சரிவு, முந்திரி சாகுபடியாளர்களுக்கு பலனளிப்பதாகவே உள்ளது என்றார் அவர்.

## குமரியில் கடல் நண்டு வரத்து அதிகரிப்பு: விற்பனை சூடு பிடித்தது

**கன்னியாகுமரி,**

கன்னியாகுமரியில் கடல் நண்டு விற்பனை சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. வாவத்துறை கடல் பகுதியில் வியாழக்கிழமை 5 கிலோ எடை கொண்ட நண்டுகள் ரூ. 400-க்கு விற்பனை செய்யப்பட்டது.

கன்னியாகுமரி வாவத்துறை பகுதியில் 150-க்கும் அதிகமான வள்ளங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கின்றனர்.

கடந்த சில நாள்களாக இவர்களின் வலையில் நண்டுகள் அதிகமாக கிடைத்து வருகின்றன.

தற்போது கிடைக்கும் நண்டுகள் அளவில் பெரிதாகவும், அதிகமான சதைப் பிடிப்புடனும் இருப்பதால் மக்கள் இதை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

சிவப்பு நிறத் தோடுகளைக் கொண்ட இந்த நண்டுகளை வாங்கும் மக்கள் பொரியல் வைத்தும், வறுவல் வைத்தும் சாப்பிடுகின்றனர்.

கடற்கரையில் மீன்களை நறுக்கும் தொழிலாளர்களிடம் நண்டுகளின் கடிகால்களை நறுக்கி அங்கேயே சுத்தம் செய்து மக்கள் வாங்கிச் செல்கின்றனர். முதுகு தண்டு மற்றும் நரம்பு மண்டல பாதிப்புகளைக் குணமாக்குவதிலும், பக்கவாதத்தை குணமாக்குவதிலும் நண்டு சிறந்து விளங்குவதாக மருத்துவர்கள் பரிந்துரை செய்வதால் கடல் நண்டுகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார் வாவத்துறை மீனவரான ஆன்றனி ஜோசப்.

**கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு**

**பெங்களூரு,**

கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து பெங்களூரு ஆய்வு மையத்தின் இயக்குநர் பி.புட்டண்ணா வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலோர கர்நாடகத்தில் அதிக இடங்களிலும், கர்நாடகத்தின் உள் பகுதியின் ஒருசில இடங்களிலும் மழை பெய்தது. ஹுப்ளி, நபோக்லு, மாதபுராவில் தலா 40 மி.மீட்டரும், மங்களூர், தர்மஸ்தலா, சேடமில் தலா 30 மி.மீட்டரும், பனம்பூர், மணி, உப்பினங்கடி, குல்பர்கா, சோம்வார்பேட்டை, அரக்கல்கோட், சர்கூரில் தலா 20 மி.மீட்டரும், புத்தூர், சுப்ரமணியா, பைல்ஹொங்கல், ஹாவேரி, பொன்னம்பேட், விராஜ்பேட், சாமராஜ்நகர், கே.ஆர்.பேட்டில் தலா 10 மி.மீட்டர் மழை பதிவாகின.

வியாழக்கிழமை தொடங்கி வருகிற 4-ஆம் தேதி வரையிலான அடுத்த 72 மணி நேரத்தில் கர்நாடகத்தில் பரவலாக இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. மே 2-ஆம் தேதி கடலோர கர்நாடகத்தின் அனைத்து மாவட்டங்கள், தென் கர்நாடகத்தின் உள்பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை பகுதியில் மிதமானது முதல் பலத்த மழை பெய்யும். வட கர்நாடகத்தின் உள்பகுதி, தென் கர்நாடகத்தின் உள்பகுதியின் அனைத்து மாவட்டங்களிலும் லேசானது முதல் மிதமான வரை மழை பெய்யக் கூடும்.

மே 3, 4-ஆம் தேதிகளில் கடலோர கர்நாடகம், வட கர்நாடகம், தென் கர்நாடகத்தின் உள்பகுதிகளின் அனைத்து மாவட்டங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வியாழக்கிழமை தொடங்கி அடுத்த 24 மணி நேரத்தில் பெங்களூருவில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

பெங்களூருவின் தட்பவெப்பம் அதிகபட்சமாக 36 டிகிரியும், குறைந்தபட்சமாக 23 டிகிரி செல்சியஸýம் இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இந்திய மாம்பழ இறக்குமதிக்குஐரோப்பா தடை விதித்தது நியாயமல்ல'



**லண்டன்**: "ஐரோப்பிய கூட்டமைப்பு, பிரச்னைகளை அரைகுறையாக புரிந்து கொண்டு, தவறான வழிகாட்டுதலின் பேரில், இந்திய மாம்பழங்களின் இறக்குமதிக்கு தடை விதித்துள்ளது" என, பிரசல்சை சேர்ந்த ஐரோப்பிய இந்திய வர்த்தக கூட்டமைப்பு (இ.ஐ.சி.சி.,)காட்டமாக தெரிவித்துள்ளது.

**பூச்சிக்கொல்லி:**இந்தியாவின் அல்போன்சா மாம்பழங்கள் மற்றும் சில காய்கறிகளில், நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கும் அதிகமாக, பூச்சிக்கொல்லி மருந்து காணப்படுவதால், அவற்றின் இறக்குமதிக்கு, இன்று முதல் தடை விதிக்கப்படுவதாக, ஐரோப்பிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய கூட்டமைப்பின் இந்த நடவடிக்கைக்கு, இ.ஐ.சி.சி.,கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. இது தொடர்பாக, இந்த அமைப்பின் தலைமை செயலர் சுனில் பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வருமாறு:ஐரோப்பிய நாடுகளின் அரசு உயரதிகாரிகள் இந்திய மாம்பழங்களுக்கு தடை விதிக்கும் முடிவை எடுத்துள்ளனர்.இது, இந்தியாவுடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக, 28 நாடுகளைக் கொண்ட ஐரோப்பியகூட்டமைப்பு நடத்தி வரும், பேச்சுவார்த்தையை பாதிக்கும். ஆனால், தாராள வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக, இந்தியா-

வுடன் பேரம் பேச, இந்த தடை உத்தரவு உதவும் என, ஐரோப்பிய கூட்டமைப்பு கருதுகிறது. அது தவறு. இது, ஐரோப்பிய நாடுகள் குறித்து,இந்தியாவில் அமைய உள்ள,புதிய அரசின் நிலைப்பாட்டை கடுமையாக்கவே வழிவகுக்கும்.ஐரோப்பிய நாடுகள், பலநூற்றாண்டுகளாக, இந்திய மாம்பழங்களையும் காய்கறிகளையும் இறக்குமதி செய்து வருகின்றன. இவற்றுக்கு தடை விதித்திருப்பது, ஐரோப்பிய கூட்டமைப்பின் பக்குவமற்ற, மோசமான கொள்கை முடிவுகளை மீண்டும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

**மறுபரிசீலனை:**இந்தியாவை விட, ஆப்ரிக்கா மற்றும் ஆசியாவை சேர்ந்த சில நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் தரம் மற்றும் ‘பேக்கிங்’ மோசமாக உள்ளன. அவற்றை தவிர்த்து விட்டு, இந்தியாவை மட்டும் குறிவைத்து எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, கண்ணியக் குறைவான, நியாயமற்ற அணுகுமுறையாகும்.ஐரோப்பிய கூட்டமைப்பு, இந்திய மாம்பழங்கள் மற்றும் காய்கறிகளின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஈரானின் கடும் நிபந்தனைகளால்...பாசுமதி அரிசி ஏற்றுமதியில் சரிவு நிலை



**மும்பை**:இந்திய பாசுமதி அரிசி இறக்குமதிக்கு, ஈரான் கடுமையான நிபந்தனை-களை விதித்துள்ளது. இதனால், ஈரானுக்கான இந்தியாவின் பாசுமதி அரிசி ஏற்று-மதி சரிவடைந்துள்ளது. இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதி யில், பாசுமதி அரி-சியின் பங்களிப்பு, 70 சதவீதமாக உள்ளது. கடந்த, 2013–14ம் நிதியாண்டில், இந்-

தியா, 28,189 கோடி ரூபாய் மதிப்பிலான, 40 லட்சம் டன் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்து உள்ளது.இதில், ஈரான் நாட்டிற்கு மட்டும், 11,488 கோடி ரூபாய் மதிப்பில், 15 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யபப்பட்டுள்ளது.

**பங்களிப்பு:**இவ்வகையில், சென்ற நிதியாண்டில், இந்தியாவின் பாசுமதி அரிசி ஏற்றுமதி யில், ஈரான், 40 சதவீத பங்களிப்பை கொண்டிருந்தது.ஆனால், நடப்பு 2014–15ம் நிதியாண்டில், இந்த பங்களிப்பு வெகுவாக குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, இந்திய பாசுமதி அரிசி இறக்குமதிக்கு, ஈரான் விதித்துள்ள பல்வேறு நிபந்தனைகள் தான் காரணம் என,ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, மரபணு மாற்ற தொழில்நுட்பத்தில் இந்திய பாசுமதி அரிசி விளைக்கபடுவதில்லை என்ற சான்றை ஈரான் கோரியுள்ளது.இத்துடன், இந்திய வேளாண் வழிமுறைகளின் சிறப்பு குறித்தும், உணவு பாதுகாப்பு மற்றும் ‘பேக்கேஜிங்’ தொடர்பான ‘ஐ.எஸ்.ஓ 22000’ சான்றுகளையும், பாசுமதி அரிசி ஏற்றுமதியாளர்கள் அளிக்க வேண்டும் என, ஈரான் தெரிவித்துள்ளது.இவற்றுக்கெல்லாம் மேலாக, இந்திய பாசுமதி அரிசியில், நிர்ணயிக்கப்பட்ட ரசாயனக் கலப்பின் அளவையும், 22 சதவீதம் குறைத்து விட்டது. பாசுமதி அரிசி மூட்டை ஒவ்வொன்றிலும், இந்த விவரங்களுடன் கூடிய அட்டை இணைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் ஈரான் உத்தரவிட்டுள்ளது.

**விழிப்புணர்வு:**மேற்கண்ட நிபந்தனைகள், நடப்பாண்டு ஜனவரி முதல் அமலுக்கு வந்துள்ளது. இதையடுத்து, ஈரான் நாட்டுக்கான, இந்தியாவின் பாசுமதி அரிசி ஏற்றுமதி சரியத் துவங்கியுள்ளது.கடந்த ஆண்டு டிசம்பரில், இந்தியாவில் இருந்து, 1.70 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, நடப்பாண்டு ஜனவரியில், 1.30 லட்சம் டன்னாகவும், பிப்ரவரியில், 89,387 டன்னாகவும் குறைந்துள்ளது. இது, மார்ச் மாதம் மேலும் குறைந்து, 55,210 டன்னாக சரிவடைந்துள்ளது. இதுகுறித்து இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் விஜய் சேத்தியா கூறியதாவது:பாசுமதி அரிசியில் உள்ள ரசாயனக் கலப்பை குறைப்பது குறித்து, விவசாயிகளிடம் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறப்பான தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பின்பற்றுமாறு ஏற்றுமதியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் தெரி-

வித்தார். இதனிடையே, இந்தியாவில் பாசுமதி அரிசி சாகுபடி செய்யும் முறை, பதப்படுத்தும் வசதிகள் உள்ளிட்டவற்றை நேரில் வந்து ஆய்வு செய்யுமாறு, ஈரான் அரசை, மத்திய வர்த்தக அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

**சவுதி அரேபியா:**இதுகுறித்து அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், "ஈரான் விதித்-துள்ள நிபந்தனைகளின்படி, இந்தியா பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய தயாராக உள்ளது; ஆனால், பல்வேறு அமைப்புகளிடம் தரச் சான்றுகளை பெற வேண்டியுள்ளதால், ஏற்றுமதியில் தாமதம் ஏற்பட்டுள்ளது," என்றார்.ஈரானுக்கு அடுத்தபடி-யாக, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட், குவைத் உள்ளிட்ட நாடுகளுக்கு, இந்திய பாசுமதி அரிசி அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## ஒரு எக்டேரில் 24 டன் நெல் சாகுபடி: மதுரை விவசாயி சாதனை

**மதுரை**: திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, தமிழகத்தில், ஒரு எக்டேரில் அதிக மகசூல் பெற்று, மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் விவசாயி சேதுமாதவன் சாதனை படைத்துள்ளார்.

தற்போது வாட்டி வதைக்கும் கோடையில், கிணற்றிலும், நிலத்தடியிலும் தண்ணீர் இல்லாமல், விவசாயம் கடுமையாக பாதித்துள்ளது. வருவாய் ஈட்ட முடியாத விவசாயிகள், வட்டிக்கு கடன் பெற்று, விவசாயம் செய்து, விளைச்சலின்றி கண்ணீர் வடிக்கின்றனர். இந்நிலையில், அரசின் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பின்பற்றி, ஒரு எக்டேரில், 24 டன் மகசூல் பெற்று சாதித்துக் காட்டியுள்ளார் விவசாயி சேதுமாதவன். இதுவரை, மதுரை மாவட்டம் அண்டமான் கிராமத்தை சேர்ந்த சோலைமலை என்ற விவசாயி தான், இத்தொழில் நுட்பத்தில் ஒரு எக்டேரில், 20 டன் நெல் மகசூல் பெற்று, முன்னிலையில் இருந்தார். தற்போது 24 டன் மகசூல் பெற்றதன் மூலம் சேதுமாதவன் முதலிடத்தை பெற்றுள்ளார்.

அவர் கூறியதாவது:

பெரியாறு வைகை பாசன திட்டத்தின் கீழ், இருபோகம் நெல் விளைவது எங்கள் பகுதி. பல ஆண்டுகளாக விவசாயம் செய்கிறேன். இந்தாண்டு இரு போகத்திற்கு தண்ணீர் இல்லாததால், ஒரு போகமாக நீண்டகால ரகம் பயிர் செய்து கூடுதல் மகசூல் பெற முடிவு செய்தேன். வேளாண் அதிகாரிகளை அணுகி, திருந்திய நெல் சாகுபடி பற்றி தொழில் நுட்பங்களை கேட்டறிந்தேன். அதை பின்பற்றி, மத்திய,

மாநில விருது பெற வேண்டும் என்ற லட்சியத்துடன், மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டேன். 'சி.ஆர்.1009' ரக விதையை தேர்வு செய்து, ஒரு எக்டேரில் 24 டன் மகசூல் பெற்றேன்.

அலங்காநல்லூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் லட்சுமணன், வேளாண் அலுவலர் ஸ்ரீதர், உதவி அலுவலர் அழகுமுருகன் ஆகியோர் இந்த வெற்றிக்கு உதவியாக இருந்தனர், என்றார்.

விவசாயி சேதுமாதவன் சாதனையை, மதுரை வேளாண் இணை இயக்குனர் ஜெய்சிங் ஞானதுரை, துணை இயக்குனர் கனகராஜ் மற்றும் வேளாண் அதிகாரிகள் பாராட்டினர்.

## வால்பாறையில் கொட்டித்தீர்த்த கன மழை

**நீலகிரி**: கோவை மாவட்டம், வால்பாறையில், கடந்த இரண்டு நாட்களாக இடியுடன் கன மழை பெய்து வருகிறது. நேற்று காலை பெய்த கன மழையில், சோலையார் எஸ்டேட் பகுதியில் மரம் விழுந்ததால் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கோடை வெப்பம் காணப்பட்ட வால்பாறையில், திடீர் மழையால் 'குளு குளு' என, மாறியுள்ளது. நீலகிரி மாவட்டம் ஊட்டியில், கடந்த இரு நாட்களாக மதிய நேரங்களில் கனமழை பெய்து வருகிறது.

நேற்று மதியம் பெய்த பலத்த மழையில், சாலைகளில் வெள்ளம் ஓடியது. குட்ஷெட் சாலையில் கால்வாயில் ஏற்பட்ட அடைப்பால், மழைநீர் வீடுகளுக்குள் புகுந்தது.

மழையால், ஊட்டி படகு இல்லம் சாலையோரம் இருந்த ராட்சத மரம், பார்க்கிங் பகுதியில் நிறுத்தியிருந்த, பெங்களூருவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் கார் மீது விழுந்தது. கடந்த இரு நாட்களாக பெய்த மழையால், அதிகபட்சம், 23 டிகிரி, குறைந்தபட்சம், 8.2 டிகிரி செல்சியசாக இருந்தது.

மே தின விடுமுறையான நேற்று, மாலை 6:00 மணி நிலவரப்படி, 20 ஆயிரம் சுற்றுலா பயணிகள், பார்வையாளர்கள் வந்திருந்தனர்.

குன்னூர் சிம்ஸ்பூங்கா, லேம்ஸ்ராக், டால்பின்ஸ் நோஸ் காட்சி முனைப்பகுதிகளுக்கும் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வந்து சென்றனர்.

## பெரியாறு அணைக்கு நீர் வரத்து

**கூடலூர்**: பெரியாறு அணை நீர்பிடிப்பில் கன மழை பெய்ததால், அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டது. கடந்த சில தினங்களாக மழையின்றி, பெரியாறு அணை நீர்மட்டம் குறைந்து வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம், அணை நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்தது. இதனால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, 285 கன அடியாக இருந்தது. நீர்வரத்து அதிகரிப்பால், நீர் மட்டமும் சற்று உயர்ந்து,நேற்று காலை நிலவரப்படி 109.60 (136) அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 100 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 849 மில்லியன் கன அடி.

* வைகை அணை நீர்மட்டம் 22.24 (71) அடியாக இருந்தது. நீர் வரத்து இல்லை. நீர்திறப்பு 40 கன அடி. நீர் இருப்பு 143 மில்லியன் கன அடி. மழையளவு (மி.மீ.,): பெரியாறு 80, தேக்கடி 69, கூடலூர் 11, சண்முகாநதி 6, உத்தமபாளையம் 22, வீரபாண்டி 32, மஞ்சளாறு 4, சோத்துப்பாறை 14.

## வறட்சியை ஈடுகட்ட மானிய வைக்கோல்

ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில், தீவன பற்றாக்குறையை சமாளிக்க துவங்கப்பட்ட, ஆறு உலர் தீவன கிடங்கு (ஃபாடர் டெப்போ) மூலம், இந்த வாரத்தில், 168 டன் வைக்கோல், 14 லட்சம் ரூபாயில், விவசாயிகளுக்கு, மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

வறட்சி காலத்தில், கால்நடை தீவன பற்றாக்குறையை சமாளிக்க, ஈரோடு மாவட்டத்தில், ஒரு வாரத்திற்கு முன், உலர் தீவன கிடங்கு திட்டம் துவங்கப்பட்டது. இம்மாவட்டத்தில் உள்ள, ஆறு கால்நடை மருத்துவமனைகளில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையங்களில், கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கு, ஒரு கிலோ வைக்கோல், 2 ரூபாய் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. வைக்கோல் உபரியாக உள்ள, விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் இருந்து, இம்மையங்களுக்கான வைக்கோல், கொள்முதல் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில், இதுவரை, 14 லட்சம் ரூபாயில், 168 டன் வைக்கோல், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## சீலா கருவாடு விலை உயர்ந்தது

**கீழக்கரை**: ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில், நெய் மீன் என்றழைக்கப்படும் சீலா மீன் கருவாடு கடந்த வாரத்தை விட, கிலோவிற்கு 200 ரூபாய் அதிகரித்து, தற்போது கிலோ ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்கிறது. சீலா மீன் கிலோ 600 முதல் 700 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆனால், கருவாடு ஆயிரத்தில் இருந்து ஆயிரத்து 200 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. மீனவர், ஒருவர் கூறுகையில்; சீலா மீன் கருவாடு இயற்கையான முறையில் மண்ணுக்குள் புதைத்து வைத்து குறிப்பிட்ட நாட்களுக்கு பின் தோண்டி எடுத்து பக்குவமாக, பதப்படுத்தி விற்கிறோம். மீன் பிடி தடை காலம் என்பதால், இந்த கருவாடிற்கு தட்டுப்பாடு அதிகம். தற்போது விசைப்படகுகள் கடலுக்கு செல்லாததால் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது, என்றார்.

## ராயப்பன்பட்டி பகுதியில் சூறாவளி: ரூ.10 லட்சம் வாழைகள் சேதம்



**உத்தமபாளையம்**: தேனி மாவட்டம், ராயப்பன்பட்டி பகுதியில், பலத்த சூறாவளி காற்றுக்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான வாழைகள் சேதமடைந்தன.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் அருகே ராயப்பன்பட்டி, சண்முகாநதி பகுதியில், 200 ஏக்கரில் வாழைகள் பயிரிடப்பட்டிருந்தது.ஆறு மாதம் முதல், ஓராண்டுபயிராக தற்போது இந்த வாழைகள் உள்ளன. நாலிப்பூவன், செவ்வாழை உள்ளிட்ட வகை வாழைகளை, விவசாயிகள் பயிரிட்டிருந்தனர்.நேற்று முன்தினம் மாலை, ராயப்பன்பட்டி, சண்முகாநதி பகுதியில் பலத்த சத்தத்துடன், சூறாவளி காற்று வீசியது. லேசான சாரல் மழை பெய்தது. சிறிது நேரத்தில் சாரல் நின்றது. சூறாவளி காற்று மட்டும், இரவு முழுவதும் வேகத்தில் வீசியது. இதனால்,

சண்முகாநதி பகுதியில் பயிரிடப்பட்டிருந்த, வாழை தோப்புகளில், வாழைகள் சாய்ந்து சேதமடைந்தன. ராயப்பன்பட்டி ராமர் என்பவர் தோப்பில்,ஏத்தை ரகத்தை சேர்ந்த 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள,1,800 வாழைகளும் சாய்ந்தன. இதே பகுதியில்,படுகை தோப்பில் உள்ள, பனிமயம் என்பவரின் 600 வாழைகள், வைரன் என்பவரது, 200 செவ்வாழைகள் உள்பட மொத்தம் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான, வாழைகள் சாய்ந்து சேதமாகின. சேத மதிப்பு குறித்து, விவசாயத்துறையினர் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், என அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பட்டையை கிளப்பும் வெயில் நுங்கு விற்பனை "கனஜோர்' பனை விவசாயிகள் மகிழ்ச்சி

**ஓமலூர்**: சித்திரை மாதத்து வெயில், பட்டையை கிளப்புவதால், பொதுமக்கள் அதிகளவில் நுங்கு சாப்பிட்டு, தங்களின் தாகத்தை தணித்து வருகின்றனர். இதனால், நுங்கு விற்பனை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஓமலூர் சுற்றுவட்டார பகுதிகளான பனங்காட்டூர், தொளசம்பட்டி, காருவள்ளி, டேனிஸ்பேட்டை, காடையாம்பட்டி, தேக்கம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், அதிகளவில் பனை மரங்கள் உள்ளன. தமிழக அரசு, கள் விற்பனைக்கு தடை விதித்துள்ளதால், இப்பகுதிகளில், விவசாயிகள் பனை மரங்களில் கள் இறக்கி விற்பனை செய்வதற்கு பதிலாக, பனை நுங்கினை, பதமாக வெட்டி விற்பனை செய்து வருகின்றனர். மேலும், நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால், ரோட்டோரங்களிலும், பஸ் ஸ்டாண்டுகளிலும், கூவிக் கூவி விவசாயிகள் விற்பனை செய்யும், பனை நுங்கினை, பொதுமக்கள் விரும்பி சாப்பிட்டு, தங்களின் தாகத்தை தணித்துக்கொள்கின்றனர்.

இதனால், கள் விற்பனைக்கு விதித்த தடையால் பாதிக்கப்பட்டிருந்த விவாயிகள், அதே மரத்தில் விளையும் நுங்கினை பதமாக வெட்டி விற்பனை செய்து, பணம் பார்க்கின்றனர். நுங்கு விற்கும் விவசாயி ஒருவர் கூறியதாவது: பனை மரத்தின் அனைத்து பாகங்களும், மனிதனின் அத்தியாவசிய தேவைக்கான பொருளாகவே உள்ளது. எனவே, கள் விற்பனைக்கு, அரசு தடை விதித்திருந்தாலும், தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், நுங்கு விற்பனை கூடியுள்ளது. அதேபோல், மருத்துவ குணம் கொண்ட, பனவெல்லமும் அதிகளவில் விற்பனை

செய்து வருகிறோம். மொத்தத்தில், விவசாயிகளின் நண்பனான பனைமரம், எங்களை எப்போதும் கைவிடுவதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

### சொட்டு நீர் பாசனம் மூலம் தக்காளி அமோக விளைச்சல்

**மூங்கில்துறைப்பட்டு**: மூங்கில்துறைப்பட்டு அடுத்த தொண்டமானூர் போகும் வழியில் உள்ள விவசாய நிலத்தில் சொட்டு நீர் மூலம் தக்காளி விளைச்சல் அமோகமாக உள்ளது. மூங்கில்துறைப்பட்டு தொண்டமானூர் பகுதியில் பிரான்சிஸ் என்பவர் தன் விவசாய நிலத்தில் சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயம் செய்துள்ளார். இப்பகுதியில் போதிய மழையின்றி விவசாயம் செய்வதில் சிரமம் இருந்தது. இதனால் சொட்டு நீர் பாசனத்தில் ஐந்து ஏக்கர் நிலப் பரப்பில் தக்காளி மற்றும் மிளகாய் பயிர் செய்துள்ளார். இதன் மூலம் தக்காளி மற்றும் மிளகாய் அமோக விளைச்சல் அடைந்துள்ளது.

### கி.கிரி.,யில் திடீர் மழை பொதுமக்கள் மகிழ்ச்சி

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி நகர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், நேற்று மாலை, திடீரென மழை பெய்ததால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வழக்கத்துக்கு மாறாக, ஃபிப்ரவரி மாத தொடக்கத்தில் இருந்து, கடும் வெயில் வீசி வருகிறது. இதனால், மாவட்டத்தில் பல பகுதிகளில் வறட்சி கோர தாண்டவம் ஆடியது. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. கத்திரி வெயில் தொடங்குவதற்கு முன்பாகவே, மாவட்டத்தில் கடும் வெயில் வீசி வந்ததால், பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வந்தனர்.

அடிக்கடி மின்தடை ஏற்படுவதால், வீட்டில் இரவு நேரங்களில் தூங்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், நேற்று மாலை, 3.55 மணிக்கு, திடீரென மேகம் சூழ்ந்து, கிருஷ்ணகிரி நகர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில், மழை பெய்தது. 10 நிமிடம் நீடித்த மழை காரணமாக சாலைகளில் மழைநீர் ஆறாக ஓடியது. அதனால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

இதேபோல், ஜெகதேவி சுற்றுவட்டாரத்திலும் மழை பெய்தது. கடும் வெப்பத்தால் மா மரங்களில் இருந்த மாங்காய்கள் வெதும்பி, கீழே விழுந்து வந்த நிலையில்,

நேற்று பெய்த திடீர் மழையால், மா மரங்களுக்கு, ஓரளவுக்கு நீர் ஆதாரத்தை கொடுக்கும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கோடையை குளிர்விக்கபொள்ளாச்சியில் திடீர் மழை

**பொள்ளாச்சி**:பொள்ளாச்சி நகரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நேற்று மதியம் சாரல் மழை பெய்ததால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். கடந்த சில நாட்களாக கடும் வெயில் மற்றும் உஷ்ணம் நிலவி வந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளாகி வந்தனர். வறட்சியால் பயிர்களுக்கு பாசனம் செய்ய வழியில்லாமல் விவசாயிகளும் வேதனையில் இருந்து வந்தனர். அதனால் அனைவரின் வேண்டுதலும் 'விரைவில் மழை வரவேண்டும்' என்பதாகவே இருந்தது. இந்நிலையில் நேற்று பிற்பகல் 3:00 மணியளவில் வானம் இருண்டு இடியுடன் கூடிய சாரல் மழை பெய்தது. தொடர்ந்து 20 நமிடங்கள் வரை பெய்து பூமியை சற்று குளிரச்செய்தது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். இது தொடர்ந்தால் பொள்ளாச்சி சுற்றுப்பகுதி வறட்சியிலிருந்து தப்பும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

## எலுமிச்சை பழம்விலை உயர்ந்தது

**திருப்பூர்**:கோடை காலம் துவங்கியதை அடுத்து, எலுமிச்சை விலை கிலோவுக்கு 10 ரூபாய் உயர்ந்துள்ளது. வெளியூர், வெளிமாவட்டங்களில் இருந்து எலுமிச்சை பழங்களை வியாபாரிகள் வாங்கி வந்து விற்கின்றனர். கடந்த வாரம் கிலோ 25 ரூபாயாக இருந்த எலுமிச்சை விலை, தற்போது 35 ரூபாயாகியுள்ளது. பல பகுதிகளில், கடும் வறட்சி நிலவுவதால், மரங்கள் காய்ந்து விட்டன. போதிய தண்ணீர் இல்லாததால், மரங்களில் காய் பிடித்தாலும் சிறிய அளவாகவே உள்ளது. ஐந்து முதல் 10 மூட்டைகள் பெறப்பட்ட ஒரு தோட்டத்தில், மூன்று மூட்டை பெறுவதே அரிதாக உள்ளது. இரண்டு மாதமாக வெயில் வாட்டி எடுப்பதால், விற்பனைக்கு பஞ்சமில்லை. சில நிமிடங்களில் விற்றுத்தீர்ந்து விடுகின்றன. வியாபாரிகள் கூறுகையில், "ஒட்டன் சத்திரம், கோவையில் உள்ள சந்தைகளில் இருந்து கேரளாவுக்கு அதிகளவில் எலுமிச்சை பழம் செல்கிறது. எங்களுக்கு குறைந்த அளவே வருவதால், விலை உயர்ந்துள்ளது. கிலோ ரூ.35க்கும், சிறிய

ரகம் நான்கு ரூபாய், பெரிய ரகம் ஏழு ரூபாய்க்கு விற்கிறோம். வரத்தை விட, தேவை அதிகமாக இருப்பதால், விலை குறைய இரண்டு
வாரங்களாகும்,' என்றனர்.

## ஊட்டி, வால்பாறையில் கொட்டித்தீர்த்த கன மழை

**ஊட்டி**:ஊட்டியில் நேற்று மதியம் கொட்டிய மழையில், வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது; கார் மீது மரம் விழுந்தது.ஊட்டியில், கடந்த இரு நாட்களாக மதிய நேரங்களில் கனமழை பெய்து வருகிறது. இதேபோல், நேற்று மதியம் பெய்த பலத்த மழையில், சாலைகளில் வெள்ளம் ஓடியது. கூட்ஷெட் சாலையில் கால்வாயில் ஏற்பட்ட அடைப்பால், மழைநீர் வீடுகளுக்குள் புகுந்தது. இதனால், அப்பகுதி மக்கள் அவதியடைந்தனர்.மழையால், ஊட்டி படகு இல்லம் சாலையோரம் இருந்த ராட்சத மரம், சாலையில் விழுந்தது; இதில், பார்க்கிங் பகுதியில் நின்று கொண்டிருந்த பெங்களூருவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் வந்த கார் மீது, மரம் விழுந்தது.

நேற்று மதியம் துவங்கி, ஊட்டியில் கொட்டிய மழையால், ஊட்டி ரோஜா பூங்காவில், பூத்து குலுங்கிய ரோஜா செடிகளில், இதழ்கள் உதிர்ந்தன.இதனால், சுற்றுலாப்பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.ஊட்டி மத்திய பஸ் ஸ்டாண்ட் சாலையில், மழைநீர் குளம் போல் தேங்கியதால், வாகன நெரிசல் ஏற்பட்டது.கடந்த இரு நாட்களாக பெய்த மழையால், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டது. அதிகபட்சம் 23 டிகிரி, குறைந்தபட்சம் 8.2 டிகிரி செல்சியசாக இருந்தது. சுற்றுலாப்பயணிகள் ஆர்வம்நீலகிரி மாவட்டத்தில், கோடை சீசன் துவங்கியுள்ள நிலையில், மே தின விடுமுறையான நேற்று, அதிகளவு சுற்றுலா பயணிகள் வந்தனர். குறிப்பாக, மே தின விடுமுறை நாளான நேற்று மாலை 6:00 மணி நிலவரப்படி, 20 ஆயிரம் சுற்றுலா பயணிகள், பார்வையாளர்கள் வந்திருந்தனர்.இதேபோன்று, குன்னுார் சிம்ஸ்பூங்கா, லேம்ஸ்ராக், டால்பின்ஸ் நோஸ் காட்சி முனைப்பகுதிகளுக்கும் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வந்து, சென்றனர்.

**வால்பாறையில் கன மழை**:

வால்பாறையில் கடந்த இரண்டு நாட்களாக வால்பாறை, எஸ்டேட் பகுதிகளில் இடியுடன் கன மழை பெய்துவருகிறது. இதனால், பொதுமக்கள் மகிழ்ச்சி

அடைந்துள்ளனர். நேற்று காலை பெய்த கன மழையினால், சோலையார் எஸ்டேட் பகுதியில் மரம் விழுந்ததால் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. சோலையாறு அணைப்பகுதியில் 10 மி.மீ.,மழை பதிவாகியுள்ளது. கோடை வெப்பம் காணப்பட்ட வால்பாறையில் திடீர் மழையால் குளு..குளு.. என மாறியுள்ளது.

## வாழைத்தார் விலை உயர்வு

**வேலாயுதம்பாளையம்**: கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, என் புகழூர், உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்களை உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியாபரிகளுக்கும் விற்பனை செய்கின்றனர். சில வியாபாரிகள் வாழைத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்துக் கொள்கின்றனர்.

வாழைத் தோட்டத்தில் விளையும் வாழைத்தார்களை விவசாயி களிடமிருந்து வியாபரிகள் வாங்கி லாரிகள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை நாமக்கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார், 200 ரூபாய்க்கும், ரஸ்தாளி வாழைத்தார் 250 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் 150ரூபாய்க்கும், பச்சை நாடன் வாழைத்தார் 200 ரூபாய்க்கும், மொந்தன் வாழைத்தார், 500 ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.

கடந்த, 30ம் தேதி பூவன் வழைத்தார், 300 ரூபாய்க்கும், ரஸ்தாலி வாழைத்தார் 350 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார், 250ரூபாய்க்கும், பச்சை நாடன் வாழைத்தார் 300 ரூபாய்க்கும், மொந்தன் வாழைக்காய், 600 ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

வாழைத்தார் வரத்து குறைந்து உள்ளதால் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கோடை காலத்தில் கறவை மாடு பராமரிப்பு கருத்தரங்கு

**கரூர்**: கோடை காலத்தில் கறவை மாடுகளை பராமரிப்பது குறித்து கால்நடை பயிற்சி கருத்தரங்கில் விளக்கம் அளிக்கப்பட்டது. கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை மருத்துவப் பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகள், மற்றும் கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி கருத்தரங்கம் நடந்தது. இதில், இணைப்பேராசிரியர் அகிலா துவக்கி வைத்து பேசியதாவது: தட்பவெப்பத்தின் தாக்கம் மனிதர்களை மட்டுமின்றி கால்நடைகளையும் வெகுவாக பாதிக்கிறது. கறவை மாடுகள் ஆண்டின் பெரும்பகுதி பால் உற்பத்தி செய்வதால் மற்ற கால்நடைகளை விட வெப்ப அயற்சியால் அதிகம் அவதிப்படுகிறது. இதனால் பால்உற்பத்தி, தரம், இனவிருத்தி திறன் குறையும். கொட்டகையைச் சுற்றிலும் நிழல்தரும் மரம்வளர்க்க வேண்டும். அலுமினியத் தகடுகளால் அமைக்கும்போது உள்புறம் கறுப்பு, வெளிப்புறம் வெள்ளை நிற வர்ணம் பூசவேண்டும். ஆஸ்பெஸ்டாஸ் ஆக இருந்தால், அதன்மீது தென்னை, பனை ஓலைகளை பரப்பி வெப்பத்தை குறைக்கலாம். கறவை மாடுகளை வெயிலில் மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது. தினமும் இரண்டுவேளை மாடுகளின் மீது நீர்தெளித்து வெப்பத்தை குறைக்கவேண்டும். இதேபோன்று தீவனத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். பசுந்தீவனம், கலப்பு தீவனத்தின் அளவை அதிகரித்து, உலர் தீவனங்களான சோளத்தட்டு, வைக்கோல் ஆகியவற்றின் மீது உப்பு கரைசலோ அல்லது சர்க்கரை கரைசலோ தெளித்து பதப்படுத்தி தீவனமாக அளிக்கலாம். தேவையான அளவு குடிநீர் கொடுக்க வேண்டும். பண்ணையில் ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். வெப்பகால நோய்கள் ஏற்பட்டால் கால்நடை மருத்துவரை அணுகி முறையான சிகிச்சை அளித்து பராமரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தொடரும் வறட்சியால் கரூரில் அதிகரிக்கும் கோரை புல் சாகுபடி

**கரூர்**: கரூர் மாவட்டத்தில், தொடர்ந்து வறட்சியான நிலை இருப்பதால், கோரை புல் சாகுபடி பரப்பளவு உயர்ந்துள்ளது. குறைந்த செலவில், அதிக லாபம் தரும் கோரை பயிரை சாகுபடி செய்வதில், கரூர் மாவட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் உள்ளனர். கரூர் மாவட்டத்தில், கடந்தாண்டு தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. கரூர் மாவட்ட விவசாயத்தின்

ஜீவாதாரமாக விளங்கும் காவிரியாற்றில், குடிநீருக்காக தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. அமராவதி ஆற்றில், சாயக்கழிவு பாதிப்பு மற்றும் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. இதனால், நிலத்தடி நீரும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. போதிய தண்ணீர் இல்லாததால், நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பணப்பயிர்களை பயிரிடுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், குறைந்த முதலீட்டில், அதிக லாபத்தை நீண்ட காலம் அளிக்கும் கோரை புல் சாகுபடி, கரூர் மாவட்டத்தில் அதிகரித்து வருகிறது. கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான வாங்கல், என்.புதூர், பிச்சம் பாளையம், கடம்பங்குறிச்சி, தளவாய்பாளையம், தோட்டக்குறிச்சி, நெரூர், மரவாப்பாளையம், புதுப்பாளையம், திருமாக்கூடலூர், அச்சமாபுரம், சோமூர், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கோரை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஒருமுறை சாகுபடி செய்தால் போதும், குறைந்தபட்சம், 30 ஆண்டுகள் வரை, ஆறு மாதத்துக்கு ஒருமுறை கோரை பயிரை அறுவடை செய்யலாம். வேறு பயிரை சாகுபடி செய்ய விரும்பினால், கோரை விதையான கிழங்கை மண்ணில் இருந்து எடுத்து விட வேண்டும். அதிகளவில் தண்ணீர், உரம் மற்றும் பராமரிப்பு செலவில்லாத கோரை பயிர், கரூர் அமராவதி மற்றும் காவிரியாற்று பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்த்தில் , கோரை பயிர்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது.

## வேளாண் மையத்தில் மீன் வளர்ப்பு பயிற்சி

**பெரம்பலூர்**: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் லாபகரமான முறையில் பண்ணை குட்டையில் மீன் வளர்ப்பு பயிற்சி மே, 15ம் தேதி நடைபெற உள்ளது.இப்பயிற்சியில் பண்ணைக்குட்டை அமைத்தல், மீன் குஞ்சுகள் பராமரித்தல் மற்றும் வாங்கும் இடம், தீவனம் அளித்தல் மற்றும் சந்தை வாய்ப்பு ஆகியவை குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் பயிற்சிக் கட்டணமாக ரூ.250 செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும்

விவரங்களுக்கு, வேளாண் அறிவியல் மையத்தை 04328- 293251, 293592 ஆகிய நம்பரில் தொடர்பு கொள்ளலாம்.

## விவசாய மேம்பாட்டுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கும் திட்டம்

**அரியலூர்**: அரியலூர் மாவட்ட வன கோட்ட அலுவலகம் சார்பில், விவசாய மேம்பாட்டுக்கு, இலவசமாக மரக்கன்றுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூரிலிருந்து ஜெயங்கொண்டம் செல்லும் சாலையில், மேலக்கருப்பூர் பிரிவு பாதை அருகே, தமிழ்நாடு வனத்துறைக்கு சொந்தமான இடத்தில், 1993ம் ஆண்டு, மத்திய நாற்றங்கால் எனப்படும் நர்சரி கார்டன் துவக்கப்பட்டது. போதிய பராமரிப்பு இல்லாமல் முடங்கி கிடந்த நர்சரி கார்டனை சீரமைத்து, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், மரக்கன்றுகள் வழங்குவதற்கான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என, அரியலூர் மாவட்ட வன கோட்ட அலுவலர் நீதிராஜன் உத்தரவிட்டார்.

இதையடுத்து, அரியலூர் சரக வன அலுவலர் சுப்பையா மேற்பார்வையில், அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மத்திய நாற்றங்கால் எனப்படும், நர்சரி கார்டன், கடந்த ஒன்றரை மாதமாக செயல்படுகிறது. இது பற்றி, அரியலூர் வன சரக அலுவலர் சுப்பையா கூறியதாவது: அரியலூர் மாவட்டம், மேலக்கருப்பூர் கிராமத்தில், ஐந்து ஏக்கர் பரப்பளவில், சீரமைக்கப்பட்டுள்ள மத்திய நாற்றங்கால் நர்சரி கார்டனில் நெல்லி, புங்கன், ஆயா, இலுப்பை, நாவல், சிவப்பு சந்தனம், ஈட்டி, ஆல், அரசு, வேம்பு, விலா உள்ளிட்ட மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, நடவுக்கு தயாராக உள்ளது. மாபெரும் மரம் நடும் திட்டம், பட்டா நிலங்களில் மரம் நடும் திட்டம், ஆற்றுப்படுகையில் தேக்கு மரம் வளர்ப்பு திட்டம், தமிழக முதல்வரின் 66வது பிறந்த நாள் மரக்கன்று நடும் திட்டம் உள்ளிட்ட திட்டங்களில், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. ஆற்றுப்படுகையில், தேக்கு மரம் வளர்ப்பு திட்டம், அரியலூர் மாவட்டத்தில், மருதையாற்று படுகை பகுதியில், அரியலூர் மாவட்ட வன கோட்ட அலுவலகம் சார்பில், செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளின் பட்டா நிலத்தில், மரக்கன்று நடும் திட்டத்தில், ஏக்கர் ஒன்றுக்கு, 200 செடிகள் வீதம், அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு, 12 ஏக்கருக்கு தேவையான மரக்கன்றுகள் இலவசமாக வழங்கி

நடவு செய்து தரப்படும். அவற்றின் பராமரிப்பு செலவாக, மூன்று ஆண்டுக்கு பின், மரக்கன்று ஒன்றுக்கு, ஐந்து ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், அரியலூர் மாவட்டத்தை பசுமையாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில், அரசு வளாகங்கள், அரசு மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், ரிசர்வ் காடுகள் உள்ளிட்ட இடங்களிலும், மரக்கன்று நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களும் தேவையான மரக்கன்றுகளை, இங்கு வந்து பெற்று கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**மதுரையில் கிணற்று நீர் பாசன விவசாயம் அமோகம்!; வறட்சியிலும் ஆண்டுக்கு 3 போக சாகுபடி**




**மன்னாடிமங்கலம்** : மதுரையில், வறட்சி கோரத்தாண்டவம் ஆடும் நிலையில், புது நெல்லு... புது நாத்து... என புது வரவாக, மன்னாடிமங்கலம் பகுதியில் கிணற்று நீர் பாசனம் மூலம் குளு... குளு... விவசாயம் ஆண்டு முழுவதும் ஜோராக நடப்பது கண்களுக்கு விருந்தளிக்கிறது. பசியால் துடிக்கும் வயிற்றுக்கு பால் வார்க்கிறது. 'மழையே நீ எங்கே போனாய்...' என தேடும் அளவிற்கு 2012க்கு பின் மழை பெய்யவில்லை. இதனால், நீர் நிலைகள், கண்மாய்கள் வறண்டு விட்டன. அவ்வப்போது எட்டிப்பார்க்கும் மழையால் ஓரளவு குடிநீர் தேவை பூர்த்தியாகி வந்தது. இந்தாண்டு துவக்கத்தில் இருந்தே மழையில்லை. வெப்ப சலனம் காரணமாக மதுரையில் நேற்று சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்தது. அதுவும் கடும் வறட்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் பெய்யவில்லை.எனினும்,

சோழவந்தான், மேலுார் உள்ளிட்ட பகுதிகளில் கிணற்று நீர் பாசனம் மூலம் ஓரளவு விவசாயப் பணிகள் நடக்கின்றன. சோழவந்தான் அடுத்துள்ள மன்னாடிமங்கலம் பகுதியில் எட்டிப்பார்க்கும் அளவுக்கு கிணறுகளில் தண்ணீர் ததும்பி நிற்பது ஆச்சரியம். இப்பகுதி விவசாயிகள் ஆண்டுக்கு மூன்று போகம் விளைச்சல் காண்கின்றனர். இங்கு, கண்ணுக்கு எட்டிய துாரம் வரை வயல்களில் பச்சை போர்த்தியது போல், நெல் விளைந்து காட்சியளிப்பது கண்களுக்கு விருந்தளிக்கிறது.

ஜெகன், பட்டதாரி விவசாயி:

இப்பகுதியில் 6 அடி மட்டத்தில் கிணறுகளில் தண்ணீர் இருப்பது வரப்பிரசாதம். 20 ஏக்கரில் நெல், வாழை பயிரிட்டுள்ளேன். இதனால், ஆண்டுக்கு மூன்று போகம் விவசாயம் நடக்கிறது. வயல்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இலவச மின்சாரம் கிடைப்பதால் போதுமான அளவுக்கு தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. ஆண்டு முழுவதும் விவசாயப் பணிகள் நடப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பிற விவசாயிகளும் விவசாயத்தில் முழு கவனம் செலுத்த வேண்டும், என விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறேன், என்றார்.

## மதுரை ஆவின் நிறுவனத்திற்கான பால் உற்பத்தி குறைவு:விவசாயிகளுக்கு விழிப்புணர்வு இல்லாததே காரணம்




**மதுரை**;மதுரை, தேனி மாவட்டங்களின் வறட்சியாலும், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு இல்லாததாலும் ஆவின் நிறுவனத்திற்கான பால் உற்பத்தி குறைந்துள்ளது. மதுரை, தேனி மாவட்ட விவசாயிகளின் கறவை மாடுகள் மூலம்,

மதுரை ஆவினுக்கு தினமும் 1.85 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. மூன்று ஆண்டுகளாக போதிய மழை இல்லை. இந்த ஆண்டு கடும் வறட்சி நிலவுகிறது. பசும்புற்களோ, செடிகொடிகளோ இன்றி, காய்ந்து போனதால், மேய்ச்சல் நிலம் சுருங்கிவிட்டது. இதனால் கறவை மாடுகளிடம் போதிய பால் சுரக்கவில்லை.எனவே, மதுரை ஆவினுக்கு வரும் பால் கொள்முதலும் குறைந்தது. சில மாதங்களாக 15 ஆயிரம் லிட்டர் வரை குறைந்த பால் உற்பத்தி, தற்போது 20 முதல் 25 ஆயிரம் லிட்டர் வரை குறைந்துள்ளது. தற்போதைய நிலையில் தினமும் 1.60 லட்சம் லிட்டர் அளவுக்கே கொள்முதல் செய்யப்படுகிறது.

தனியார் பால் நிறுவனங்களும் போட்டி போட்டு கொள்முதல் செய்வதும் பால் வரத்து குறைவுக்கு காரணம். பால் உற்பத்தியை அதிகரிக்க, மாட்டுத் தீவனத்தை மானிய விலையில் ஆவின் வழங்கி வருகிறது.

ஆனால், விவசாயிகளிடையே போதிய விழிப்புணர்வு இல்லாததால், அவர்கள் அதை வாங்கி பயன்படுத்துவதில்லை.வெளிமார்க்கெட்டில் கிடைக்கும் மாட்டுத் தீவனத்தை ஆவின் நிறுவனம், ஒரு மூடை ரூ. 625க்கு வழங்குகிறது. ஆந்திர அரசால் தயாரிக்கப்படும், அதே தீவனம் வெளிமார்க்கெட்டில் ரூ.1400 வரை விற்பனையாகிறது.

மேலும், தாது உப்புகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன. இவற்றை பயன்படுத்துவதால், பால் கெட்டியாகவும், மாடுகள் ஆரோக்கியமாகவும் இருக்கும். இருப்பினும் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை, என ஆவின் நிர்வாகம் ஆதங்கப்படுகிறது.

வருவாய் குறைவை சமாளிக்க, விரைவில் ஆவின் பால் விலையை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது. இதை மறுத்த ஆவின் அதிகாரிகள், "இது வெறும் வதந்திதான்," என்றனர்.

### கறவை மாடுகளுக்கு அரசு இன்சூரன்ஸ் தேவை

**நத்தம்**: பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், கறவைமாடுகளுக்கு, அரசே முழு அளவில் இன்சூரன்ஸ் செய்ய நடவடிக்கைஎடுக்க வேண்டும்.நத்தம் பகுதியில்விவசாயிகளின் வாழ்வாதாரமாக பால் உற்பத்திஉள்ளது.

கறவை மாடுகள் வளர்ப்போர் பயன் பெறும் வகையில் அரசே, கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை ஏற்படுத்தி பால் கொள்முதல் செய்கிறது. இச்சங்கங்கள் மூலம் அரசே கறவை மாடுகள் வாங்க, வங்கிகள் மூலம் கடனுதவிகளை வழங்குகிறது.

உற்பத்தியாளர்கள்,சங்கஞக்கு பால் விற்று கடனை திருப்பி செலுத்துகின்றனர். கறவை பசுக்கள் நோயாலோ அல்லது விபத்துக்களில் இறக்க நேரிட்டால் அரசு மூலம் 50 சதவீதம் வரை இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. சிலர் உற்பத்தியாளர்கள் விபரம் தெரியாமல் கறவை பசுக்களுக்கு இன்சூரன்ஸ் செய்வதில்லை.

எதிர்பாராமல் பசுக்கள் இறக்க நேரிடும் போது, இவைகளுக்குரிய தெ ாகையை பெற முடியாமல் நஷ்டமடைகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளாக மழை இல்லாததாலும், மாடுகளுக்கு தீவனம் கிடைக்காததால், பால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

வெயிலின் கொடு மை, கோ மாரி போன்ற நோய்களால் இப்பகுதிகளில் பல கறவை மாடுகள் இறந்துள்ளன. பால் உற்பத்தியை பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் பசுக்களின் இழப்புக்களிலிருந்து உரிய தொகை பெறுவதற்கு, அரசே இவர்களின் கறவை மாடுகளுக்கு முழு அளவில் இன்சூரன்ஸ் செய்ய முன் வரவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## மா சாகுபடி அதிகரிக்கும் திட்டம்: மனுக்கள் பெறும் பணி ஜரூர்

**கம்பம்**:இந்த ஆண்டிற்கான ஒதுக்கீடு அனுமதி கிடைப்பதற்க முன்பே, தோட்டக்கலைத்துறையினர் மா சாகுபடிபரப்பை அதிகரிக்கும் திட்டத்தில், விவசாயிகளிடம் இருந்து மனுக்களை பெற்று வருகின்றனர்.

தேசிய தோட்டக்கலை இயக்ககம் சார்பில், ஒவ்வொரு பயிருக்கும் பரப்பு அதிகரித்தல், நவீன தொழில்நுட்பம் வழங்குதல், மார்க்கெட்டிங் செய்து கொடுத்தல் என பல பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மா சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கென, தனி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாவட்டத்திற்கு குறிப்பிட்ட பரப்பை இலக்காக நிர்ணயித்து, மானியம் வழங்கும்.இந்த ஆண்டு,இன்னமும் இலக்கு அறிவிக்கப்படாத நிலையில், கம்பம் பகுதியில் உள்ள தோட்டக்கலை

அலுவலர்கள், விவசாயிகளிடம் மா சாகுபடிக்கென "சிட்டா' அடங்கல் மற்றும் விண்ணப்பங்களை வாங்கி வருகின்றனர்.

இது தொடர்பாக,தோட்டக்கலைத்துறையினர் கூறுகையில்,"" கம்பம் பகுதியில் மல்கோவா, பங்கனப்பள்ளி உள்ளிட்ட சில ரகங்களின், சாகுபடி பரப்பை மானாவாரி நிலங்களில் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஒவ்வொரு விவசாயிக்கும், ஒரு எக்டருக்கு 100 கன்றுகள் வழங்கப்படும். இதற்கென, 16 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. கன்று விலை, உரம், பூச்சி மருந்துகள் இதில் அடங்கும். ரொக்கமாக 3 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். இப்போதே, விண்ணப்பங்களை வாங்கி,சரி பார்த்து தயாராக வைத்தால், திட்டம் வரும் போது, அதை நடைமுறைப்படுத்துவது எளிதாக இருக்கும்.

எனவே தான் விவசாயிகளிடமிருந்து, விண்ணப்பங்களை வாங்கி வருகிறோம். மா உற்பத்தியை பெருக்க உதவும் திட்டமாகும்' என்றார்.

திட்டத்திற்கான அனுமதி கிடைக்காவிட்டாலும், முன்கூட்டியே விண்ணப்பங்களை பெற்று தயார் நிலையில் இருக்க நடவடிக்கை எடுத்து வரும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளின் பணியை விவசாயிகள் பாராட்டியுள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**4ம் தேதி முதல் கத்திரி தொடக்கம் கடும் வெயிலால் அனல் காற்று வீசும்**

**சென்னை,** : வரும் 4ம் தேதி கத்திரி வெயில் தொடங்குகிறது. 24ம் தேதிவரை இது நீடிக்கும். வெயிலின் தாக்கத்தால் அனல் காற்று வீசும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் கடுமையான வெயில் காரணமாக வறட்சி தலைகாட்டத் தொடங்கியுள்ளது. ஏரி, குளங்களில் நீர்மட்டம் வெகுவாக

குறைந்தது. வெப்ப காற்றும் சேர்ந்து கொண்டது. மரம், செடி, கொடிகள் எல்லாம் வெயிலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் கருக தொடங்கியுள்ளன.

வெயிலில் வெளியில் தலை காட்ட முடியாமல் பொதுமக்கள் வீட்டுக்குள் முடங்கியுள்ளனர். சென்னையில், நேற்று அதிகப்பட்சமாக 97 டிகிரி வெயில் அடித்தது. பல இடங்களில் வெப்ப காற்று வீசியது.

பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நேற்று விடுமுறை நாள் என்பதாலும், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை என்பதாலும் சாலைகள் வெறிச்சோடின. கடுமையான வெப்பத்தின் காரணமாக சாலைகளில் கானல் நீர் காணப்படுகிறது. மாலை வேளைகளில் பொதுமக்கள் குடும்பத்துடன் கடற்கரை மற்றும் பூங்காக்களுக்கு செல்கின்றனர்.

தமிழகத்தில் கோடை யில் ஆண்டுதோறும் ஏற்படும் கத்திரி வெயில் எனப்படும் அக்னி வெயில் காலம் வரும் 4ம் தேதி தொடங்கி 24ம் தேதி வரை நீடிக்கும். இடைப்பட்ட நாட்களில் பொதுவாக வறண்ட வானிலை காணப்படும்.

வானம் தெளிவாக இருக்கும். இதனால், வெயில் நேரடியாக பூமியை தாக்கும். அப்போது கடுமையான வெப்பம் பிரதிபலிக்கும்.

இதனால் வெப்ப காற்று வீசும்; புழுக்கம் அதிகமாக இருக்கும். கடந்த ஆண்டு அதிகபட்சமாக வேலூர், தர்மபுரி, பாளையங்கோட்டை, சேலம் பகுதிகளில் 110 டிகிரி வெயில் கொளுத்தியது.

இந்தாண்டு அதைவிட அதிகமாக வெயில் அளவு இருக்கும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரி தெரிவித்தார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெல் சாகுபடி முறையில் எக்டருக்கு 24 ஆயிரம் கிலோ மகசூல் அலங்காநல்லூர் விவசாயி சாதனை**



**மதுரை,**

திருந்திய நெல்சாகுபடி முறையில் இயற்கை உரங்களை அதிக அளவில் பயன்படுத்தி முறையான அளவில் நீர் பாசனம் செய்ததன் மூலமும் எக்டருக்கு 24 ஆயிரம் கிலோ மகசூலை பெற்று மதுரை மாவட்டத்தை சேர்ந்த விவசாயி சாதனை படைத்துள்ளார்.

**திருந்திய நெல் சாகுபடி**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரை அடுத்த சின்ன இலந்தை குளத்தை சேர்ந்தவர் சேது மாதவன். விவசாயியான இவர் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிட்டு எக்டருக்கு 24 ஆயிரம் கிலோ மகசூலை பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, ஒரிசா வேளாண் பல்கலை ஆராய்ச்சி மையம் கண்டுபிடித்த சிஆர் 1009 என்ற நெல் ரகம் 160 நாள் வயதுடையது. இந்த விதைகளை விதைக்கும் முன்பு அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா

கலந்து விதையை நேர்த்தி செய்து மேட்டுப்பாத்தி நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

ஆட்டுக் கிடை போடுவது, நிலத்தில் தக்கைப்பூண்டு விதைத்து மடக்கி உழுவது மற்றும் கடைசி உழவில் தொழுஉரம் போடுவது ஆகியவற்றால் நிலத்தின் மண்ணை அதிக சத்துள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியும். இயற்கை உரம் போட்டும் சத்துக்கள் குறைவாக காணப்படுவதாக தெரிந்தால் நிலத்தில் மண் பரிசோதனை செய்ய வேண்டும். எனது நிலத்தில் செய்யப்பட்ட ஆய்வின்படி டி.ஏ.பி, யூரியா, பொட்டாஷ், ஜிங்சல்பேட் உரங்கள் மண்ணை வளமாக்க தேவைப்பட்டன. பரம்படித்த பின்னர் நெல் நுண்ணூட்ட உரம் 12.5 கிலோ, பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்பைரில்லம் போன்றவற்றை தொழு உரத்துடன் கலந்து இடப்பட்டது. பின்னர் 14 நாட்கள் வயதுடைய நாற்றுக்கள் 25 க்கு 25 செ.மீ இடைவெளியில் நடப்பட்டது.

**<u>களையெடுப்பு</u>**

பூச்சிகளை கட்டுப்படுத்தும் மருந்துகளுடன் ஹியூமிக் அமிலம் கலந்து தெளித்ததால் நெற்பயிரை தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் இலைச்சுருட்டு புழுக்களின் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டன. நடவு செய்தது முதல் 10 நாட்கள் வரை 2.5 செ.மீ அளவும், களையெடுப்புக்கு பின்னர் 3 செ.மீ அளவு பாசன நீரும் வயலில் பராமரிக்கப்பட்டது.

இந்த நிலையில் எனது நிலத்தை ஆய்வு செய்த வேளாண் அதிகாரிகள் ஒரு சதுர மீட்டருக்கு 2.5 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்க வாய்ப்பிருப்பதாக சொன்னார்கள். அதன்படி தற்போது எக்டருக்கு 24 ஆயிரம் கிலோ மகசூல் கிடைத்துள்ளது. மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை அறிவுறுத்தலின் பேரில் வேளாண் அதிகாரிகளான லட்சுமணன் மற்றும் ஸ்ரீதர் ஆகியோர் மூலம் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது என்றார்.

**<u>சாதனை</u>**

இந்த சாதனை குறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை கூறியதாவது, இயற்கை உரங்களான தக்கைப்பூண்டு, தொழுஉரம்

மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தியது, நீர், உரம், காற்றுக்காக பயிர்களை போதிய இடைவெளியில் நட்டது, எலிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தியதும் காரணமாகும். மேலும் இளம் நாற்றுக்களை நடவு செய்ததால் அதிக சிம்புகள் வெடித்து அதிக நெல்மணி உருவானதும், கோனோவீடர் கொண்டு களை எடுத்தததால் அதிக வேர்கள் உருவானதாலும் தான் இந்த அளவுக்கு மகசூல் அளவு எட்டப்பட்டுள்ளது. இந்திய அளவில் இந்த அளவுக்கு வேறு எந்த மாநிலத்திலும் மகசூல் கிடைத்ததில்லை" என்றார்.

**விவசாய கடனை உரியகாலத்தில் செலுத்தினால் 3 சதவீதம் வட்டி திரும்ப வழங்கப்படும் ரிசர்வ் வங்கி அறிவிப்பு**




**மயிலாடுதுறை,**

விவசாய கடனை உரியகாலத்தில் செலுத்தினால் 3 சதவீத வட்டி திரும்ப வழங்கப்படும் என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

<u>கோரிக்கை மனு</u>

மயிலாடுதுறை அருகே உள்ள புங்கனூர் நுகர்வோர் பாதுகாப்பு கழக சட்ட ஆலோசகர் விஜயகுமார் தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கி ஆகியவற்றுக்கு கடந்த 2013–ம் ஆண்டு ஒரு கோரிக்கை மனு அனுப்பி இருந்தார். அதில் கூறியிருப்பதாவது:–

விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயத்துக்காக வாங்கும் நகை கடனை உரிய காலத்தில் செலுத்தும் போது அசலுடன் 7 சதவீதம் வட்டி வசூல் செய்கின்றனர். 1 ஆண்டு கழித்து 3 சதவீதம் வட்டியை விவசாயிகளுக்கு திருப்பி வழங்கி வருகின்றனர்.

ஆனால் ஒரு சில சமயங்களில் வட்டி கிடைக்காத நிலையும் உள்ளது என்று விவசாயிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். சில தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 1 ஆண்டுக்கு மேலாகியும் இந்த வட்டி திருப்பி வழங்கப்படவில்லை. எனவே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர் கூறியிருந்தார்.

3 சதவீதம் வட்டி

இதன் பேரில் ரிசர்வ் வங்கியின் கிராம திட்டம் மற்றும் கடன் துறையின் சென்னை மத்திய அலுவலகத்தில் இருந்து அதன் பொது மேலாளர் பதில் கடிதம் அனுப்பி உள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைபடி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பிரைவேட் செக்டார் ஷெட்யூல் வணிக வங்கிகள் ஒரு நபருக்கு விவசாய கடனாக ரூ. 3 லட்சம் வரை 7 சதவீத வட்டிக்கு வழங்க வேண்டும்.

விவசாயிகள் உரிய காலம் அல்லது ஒரு ஆண்டுக்குள் அந்த கடன் தொகையை செலுத்திவிட்டால், அவர்களுக்கு 3 சதவீத வட்டியை திரும்ப வழங்க வேண்டும்.

விவசாயிகள், குறுகிய கால வவிசாய கடன், அறுவடைக்கு பிறகு செய்யப்படும் செலவு, விவசாய பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான கடன், விவசாயிகள் வீட்டு உபயோகப் பொருட்கள், விவசாயம், பால்பண்ணை மற்றும் மீன் பண்ணை ஆகியவற்றை பராமரிப்பதற்கான தொகை, விவசாயத்துக்கான பம்பு செட், ஸ்பிரேயர், கறவை மாடு போன்றவற்றை வாங்குவதற்கும் விவசாய கடன் பெறலாம். வங்கிகள் ஒவ்வொரு 6 மாதத்துக்கு ஒரு முறை விவசாயிகள் உரிய காலத்தில் செலுத்திய விவசாயக் கடன் குறித்து 3 சதவீத வட்டியை பெற்று அவர்களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் சுட்டெரிக்கும் கத்திரி வெயில் 4–ந் தேதி தொடங்குகிறது 113 டிகிரி வெயில் வரை கொளுத்தும் என அதிகாரி தகவல்**



**சென்னை,**

தமிழகம் முழுவதும் சுட்டெரிக்கும் கத்திரி வெயில் 4–ந் தேதி தொடங்குகிறது. கத்திரி வெயில் காலத்தில் அதிகபட்சமாக 113 டிகிரி வெயில் கொளுத்தும் என்று வானிலை அதிகாரி தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை

தமிழ்நாட்டில் கடந்த வடகிழக்கு பருவமழையின் போது போதுமான அளவுக்கு மழை பெய்யவில்லை. வழக்கத்தை விடவும் குறைவாக பெய்தது. அதனால் பல ஏரிகள், குளங்கள் நிரம்பவில்லை. அதன் காரணமாக விவசாய தொழில் பாதித்துள்ளது.இந்த வருடமாவது மழை போதிய அளவுக்கு பெய்தால் நல்லது என்று விவசாயிகளும், பொதுமக்களும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இந்த வருட கோடை வெயில் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் அக்னி நட்சத்திரம் என்கிற கத்திரி வெயில் தொடங்கும் முன்பே தமிழ்நாட்டில் வெயில் வாட்டி வதைக்கிறது.

100 டிகிரிக்கும் அதிகமான வெயில்

இதுவரை தமிழகத்தில், வேலூர், சேலம், தர்மபுரி, கரூர், மதுரை, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் பதிவானது.சென்னையில், கடந்த 2 ஆண்டுகளாக அதிகபட்சம் 109.4 டிகிரி

வெயில் அடித்தது. இதுவரையிலான அதிகபட்ச வெயிலாக 2003 மே 31–ந் தேதி 113 டிகிரி வெயில் அடித்து உள்ளது.

<u>வேலூரில் அதிகபட்சம் 113 டிகிரி வெயில்</u>

பொதுவாக தமிழகத்தில் அதிகம் வெயில் அடிக்கும் மாவட்டமாக வேலூர் கருதப்படுகிறது.வேலூரில் இதுவரையிலான அதிகபட்ச வெயிலாக 2003 மே 22, 31–ந் தேதிகளில் 113 டிகிரி வெயில் கொளுத்தியது. கடந்த ஆண்டு அதிகபட்சமாக 111 டிகிரி வெயில் பதிவானது. சேலத்தில், அதிகபட்ச வெயிலாக 1931 மே 22–ந் தேதி 109 டிகிரி வெயில் பதிவானது.இந்த நிலையில் 4–ந் தேதி முதல் 28–ந் தேதி வரை கத்திரி வெயில் காலம் ஆகும். இந்த காலகட்டத்தில், அதிகபட்சமாக 113 டிகிரி வரை வெயில் பதிவாக வாய்ப்பு உள்ளது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**ஐரோப்பிய யூனியனிடம் மாம்பழம் இறக்குமதி மீதான தடையை நீக்க கோரிக்கை**



ஐரோப்பிய யூனியனிடம் இந்திய மாம்பழம் இறக்குமதி மீதான தடையை நீக்குமாறு மத்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

**உயர்தர அல்போன்சா**

28 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய யூனியன், கடந்த மார்ச் மாதத்தில் இந்தியாவின் உயர்தர அல்போன்சா மாம்பழ இறக்குமதி மே மாதத்திலிருந்து நிறுத்தப்படும் என தெரிவித்தது. மாம்பழங்களில் பூச்சித் தொற்று

இருப்பதாக கூறி 2015 டிசம்பர் மாதம் வரை தடை விதிக்கப்படுவதாக ஐரோப்பிய யூனியன் தெரிவித்தது. இதனையடுத்து மாம்பழங்கள் மீது தீவிர ஆய்வு மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தலைமை இயக்குனர் அஜய் சகாய் தெரிவித்தார்.

‘‘இந்திய மாம்பழங்களுக்கு ஐரோப்பா ஒரு பெரிய சந்தை இல்லை. எனினும் எந்த ஒரு தடையும் மாம்பழத்தின் விலையை குறைத்து விடும் என்றும், இதனால் விவசாயிகளுக்கு வருமானம் பெரிதும் குறையும். கடந்த சில தினங்களில் உள்நாட்டில் விலை ஏறக்குறைய 15 சதவீதம் சரிவடைந்துள்ளது’’ என்று அவர் கூறினார்.

மாம்பழத்திற்கு மட்டுமல்லாமல் சில காய்கறிகளுக்கும் ஐரோப்பா தடை விதித்துள்ளது. தாராள வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில் இது ஒரு பெரிய பின்னடைவாக கருதப்படுகிறது. 2007–ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஐரோப்பிய யூனியனுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இரு தரப்பிலும் சில நிபந்தனைகள் காரணமாக இன்னும் இந்த ஒப்பந்தம் நிறைவேறாமலேயே உள்ளது.

நீண்ட காலமாக ஐரோப்பா இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக பங்குதாரராக இருந்து வருகிறது. எனவே ஐரோப்பிய ஒன்றியத்துடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளும் பட்சத்தில் இரு தரப்பிலும் முதலீட்டு வாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதுடன், பரஸ்பர வர்த்தகமும் (ஏற்றுமதி + இறக்குமதி) பன்மடங்கு உயரும்.

**இந்தியா முதலிடம்**

சர்வதேச அளவில் மாம்பழ உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. உலகின் மொத்த மாம்பழ உற்பத்தியில் இந்தியாவின் பங்கு சுமார் 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. சீனா, தாய்லாந்து, மெக்சிகோ, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, பிரேசில், நைஜீரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளும் மாம்பழம் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. சர்வதேச மாம்பழ உற்பத்தியில் ஆசியாவின் பங்கு (இந்தியா நீங்கலாக) 33 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் மாம்பழங்களில் 80 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கிறது.

**மார்ச்சிலிருந்து இதுவரை விவசாய துறை நிறுவனங்களின் பங்கு விலை 70% வரை உயர்வு**



**புதுடெல்லி,**

மார்ச் மாதத்திலிருந்து இதுவரை விவசாய துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் பங்கு விலை 70 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

உரம், பூச்சி மருந்து உற்பத்தி மற்றும் நீர்ப்பாசன வசதி போன்ற துறைகளைச் சேர்ந்த ஐந்து முன்னணி நிறுவனங்களின் பங்கு விலை இரண்டே மாதங்களில் கணிசமாக உயர்ந்துள்ளது.

இதில் அவந்தா பங்கின் விலை 70 சதவீதத்திற்கு அதிகமாகவும், யு.பி.எல். பங்கின் விலை 50 சதவீதத்திற்கு அதிகமாகவும் உயர்ந்துள்ளது.

மான்சான்டோ மற்றும் ஜெயின் இரிகேஷன் ஆகிய நிறுவனங்களின் பங்குகளும் முதலீட்டாளர்களுக்கு நல்ல ஆதாயம் அளித்துள்ளன.

அண்மைக் காலமாக எல் நினோ பருவநிலை மாற்றம் பற்றிய பல்வேறு செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதனால் பருவமழை குறைந்து வேளாண் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சமும் எழுந்துள்ளது. என்றாலும் வேளாண் துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் பங்குகளின் விலை சரிவடையவில்லை. மற்ற பொதுவான காரணங்களால் இத்துறை நிறுவனங்களின் பங்குகளும் ஏற்றம் கண்டுள்ளன.

பசிபிக் கடல் பகுதியில் ஏற்படும் எல் நினோ பருவநிலை மாற்றத்தால் பருவமழை குறையும் பட்சத்தில் விவசாயத் துறை நிறுவனப் பங்குகளுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

எனினும் இத்துறையில் பல நிறுவனங்களின் பங்குகள் எல் நினோ விளைவால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் திறன் கொண்டவையாகவே இருக்கும் என சில நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

**அரிசி, பருப்பு விலை குறையுமா?**



**கொல்கத்தா,**

மத்தியில் எந்த கட்சி ஆட்சி அமைத்தாலும் விலைவாசியை குறைக்க வேண்டியதே முதல் பெரிய பணியாக இருக்கும். குறிப்பாக முக்கிய உணவுப் பொருள்களான அரிசி, பருப்பு விலையை குறைக்க வேண்டிய கட்டாயம் புதிய அரசுக்கு ஏற்படும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

பருப்பு உற்பத்தி பாதிப்பு

ரபி பருவத்தில் மோசமான வானிலையால் பயிர்கள் சேதமானதையடுத்து பருப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் ஜனவரி மாதத்திலிருந்து நாட்டின் பல பகுதிகளில் சில்லறை விற்பனையில் பருப்பு விலை 10 சதவீதம் முதல் 27 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. அதுபோல், மார்ச் இடைப்பகுதியிலிருந்து அரிசி விலை 5 முதல் 7 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

கடந்த நிதி ஆண்டில் (2013–14) 32 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டது. ரபி பருவ உற்பத்தி பாதிக்கப்பட்டதால் நடப்பு ஆண்டில் பருப்பு இறக்குமதி அதிகரிக்கும் என்றும், ஜுலையிலிருந்து பருப்பு விலை மேலும் 5 சதவீதம் அதிகரிக்கும் என்றும் இந்திய பருப்பு, தானிய சங்கத்தின் தலைவர் பிரவீண் டாங்ரி கூறினார். கடந்த நான்கு மாதங்களில் ஒரு கிலோ உளுந்து விலை ரூ.41 என்ற அளவிலிருந்து ரூ.45–ஆக உயர்ந்துள்ளது. மஞ்சள் பட்டாணி விலை ரூ.26 என்ற அளவிலிருந்து ரூ.30–ஆக அதிகரித்துள்ளது. இதில் மைசூர் ரகம் அதிகபட்சமாக 25 சதவீதம் உயர்ந்து ரூ.51–ஐ எட்டியுள்ளது.

இந்நிலையில் எல் நினோ பருவநிலை மாற்றம் பற்றிய செய்திகள் பல்வேறு தரப்பிலும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பருவமழை குறைந்தால் கரீஃப் பருவத்திலும் (ஜுன்–அக்டோபர்) பருப்பு உற்பத்தி பாதிக்கப்படும். மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் பருப்பு உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. நாட்டின் மொத்த பருப்பு உற்பத்தியில் இந்த மாநிலங்களின் பங்கு 80 சதவீதமாக உள்ளது.

பருப்பு விலையை நிர்ணயிப்பதில் பருவநிலை முக்கிய அங்கம் வகிக்கிறது என்றால் அரிசி விலையை சில்லறை வர்த்தகம்தான் கட்டுப்படுத்துகிறது. ஏற்றுமதி வாய்ப்புகள் காரணமாக விவசாயிகள் தற்போது பாசுமதி நெல் சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் நடப்பு நிதி ஆண்டில் 1.20 கோடி டன் பாசுமதி அரிசி உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**10 கோடி டன் அரிசி**

நம் நாட்டில் ஆண்டுக்கு சுமார் 10 கோடி டன் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் சுமார் 80 லட்சம் டன் பாசுமதி அரிசியாகும். நடப்பு நிதி ஆண்டில் பஞ்சாப், அரியானா மற்றும் உத்தரபிரதேசத்தில் அரிசி உற்பத்தி சரிவடையலாம் என இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் விஜய் சேத்தியா தெரிவித்தார்.

**வரலாறு காணாத அளவிற்கு உயர்வு கடல் உணவுப்பொருள்கள் ஏற்றுமதி ரூ.30,000 கோடியை எட்டியது**



**கொச்சி,**

2013–14–ஆம் நிதி ஆண்டில் கடல் உணவுப்பொருள்கள் ஏற்றுமதி வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்து ரூ.30,000 கோடியை எட்டியுள்ளது. சர்வதேச சந்தையில் கடல் உணவுப்பொருள்களுக்கான தேவைப்பாடு அதிகரித்ததால் இந்தியாவின் ஏற்றுமதி உயர்ந்துள்ளது.

**பிப்ரவரி நிலவரம்**

சென்ற நிதி ஆண்டில் பிப்ரவரி மாத இறுதி நிலவரப்படி ரூ.26,500 கோடிக்கு கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 40 சதவீதம் (ரூ.18,856 கோடி) அதிகமாகும். மொத்த கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வருவாயில் வண்ணமை இறாலின் பங்கு 65 சதவீதமாக உள்ளது. ஆந்திரா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களில் பெருமளவில் வண்ணமை இறால்கள் வளர்க்கப்படுகின்றன.

1990–களின் இறுதியில் இந்தியாவில் இருந்து கடல் உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்ய ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன. இதனையடுத்து, இந்திய கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி ஆணையம் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கடல் உணவு பொருள்கள் தரத்தை அதிகரிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பண்ணைகளில் வளர்க்கப்படும் இறால்கள் முதிர்ச்சி அடைவதற்கு

முன்பே பரிசோதனை செய்யப்படுகின்றன. இதனால் ஏற்றுமதியில் ஏற்படும் இடர்பாடுகள் தவிர்க்கப்படுகின்றன.

**பரிசோதனை கூடங்கள்**

கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி ஆணையம் இருபது பரிசோதனை கூடங்களை நிறுவி உள்ளது. இது தவிர ஏற்றுமதியாளர்களும் ஆய்வுகூடங்களை அமைத்துள்ளனர். இறால் வளர்ப்பு பண்ணை விவசாயிகள் பரிசோதனை கூடங்களை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரித்து வருகின்றனர். கடந்த நிதி ஆண்டில் 3 லட்சம் டன் கடல் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்க 50 வகையிலான மலர்ச்செடிகள் தயார்**



ஏற்காடு,

ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையில் 50 வகையிலான மலர்ச்செடிகள் தயாராக உள்ளன.

**<u>ஏழைகளின் ‘ஊட்டி‘</u>**

தமிழகத்தில் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் சேர்வராயன் மலையில் அமைந்துள்ள மலைவாசஸ்தலம் ஏற்காடு.

கடல் மட்டத்தில் இருந்து 1,515 மீட்டர் உயரத்தில் இயற்கை எழில் சூழ்ந்துள்ள அழகு, இதமான வானிலை சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது. சுற்றுலா ஸ்தலமான கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைவாசஸ்தலத்துடன் ஒப்பிடும்போது, இங்கு பல விஷயங்கள் மலிவாக இருப்பதால் ஏற்காட்டை ‘‘ஏழைகளின் ஊட்டி’’ என்று சொல்லப்படுவதுண்டு.

சேலம் மாநகரில் இருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால், பரந்த அமைதியான பள்ளத்தாக்குகளும், இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகளையும் உடைய ஏற்காட்டில் சுற்றுலா பயணிகள் கண்டு களிப்பதற்கான இடங்கள் பல உண்டு. கோவில்கள், நீர்வீழ்ச்சிகள், குகைகள், மலை உச்சியில் இருந்து பார்க்கும்போது பள்ளத்தாக்கின் ஒய்யாரமான அழகு, சுற்றுலா பயணிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். ஏற்காட்டில் பட்ஜெட் ஓட்டல்கள், ஆடம்பர விடுதி, வீடு போன்ற தங்கும் விடுதி என சுற்றுலா பயணிகள் விருப்பம்போல தேர்வு செய்யலாம்.

**<u>கோடைவிழா நடக்குமா?</u>**

ஏற்காட்டில் உள்ள எழில் கொஞ்சும் இடங்களை சுற்றிப்பார்க்க ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் உள்ளூர் மட்டுமின்றி வெளிமாவட்டங்களில் இருந்தும், பக்கத்து மாநிலமான பெங்களூர், ஆந்திரா உள்பட பல்வேறு வெளி மாவட்டங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருவது வழக்கம்.

ஆண்டுதோறும் மே மாதம் இறுதியில் சுற்றுலாத்துறை–தோட்டக்கலைத்துறை சார்பில் கோடை விழா மலர்க்கண்காட்சியுடன் நடத்தப்படுவது வழக்கம். இந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் போதிய மழை இல்லாவிட்டாலும், காய்ந்து கருகிபோன மரங்கள்கூட தற்போது துளிர்விட தொடங்கி இருக்கிறது.

அதை கருத்தில் கொண்டு இம்மாத (மே) இறுதியில் 39–வது கோடை விழா நடத்துவதா? வேண்டாமா? என்பது ஆலோசனையில் உள்ளது. ஏனென்றால் பாராளுமன்ற தேர்தல் முடிந்தாலும் வாக்கு எண்ணிக்கை வருகிற 16–ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் 20–ந் தேதிவரை அமலில் உள்ளது. எனவே, கோடை நடத்துவது குறித்த முடிவு இன்னும் இறுதி செய்யப்பட வில்லை.

**மலர்ச்செடிகள் தயார்**

இருப்பினும் கோடை காலத்தில் ஏற்காடு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் லேடீஸ் சீட் அருகில் உள்ள தாவரவியல் பூங்காவில் காஸ்மாஸ், டேலியா, பிளாக்ஸ், எலிகோனியம், ஜெர்பிரா, சால்வியா, டெய்சி, பிரெஞ்ச்–அமெரிக்கா வகையிலான மேரிகோல்டு, கிளியோம், ஜினியா, கோரியாப்சிங், ஜேரோனியம், பியூசியா, இன்பேசன்ஸ், பேன்சி ரக பூக்கள், பெர்கோனியா, ஹைட்ரான்சியா, பெட்டூனியா, காப்ஸ்கோம் என 50–க்கும் மேற்பட்ட தாவரவியல் பெயரிலான வண்ண மலர்ச்செடிகள் 20 ஆயிரம் பூந்தொட்டிகளில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இவற்றில் 100 மொட்டுகள் கொண்ட செம்பருத்தி செடிகள் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் உள்ளன.

**கால்நடை மருத்துவப்படிப்பில் சேர 12–ந்தேதி முதல் விண்ணப்பம் வினியோகம் விண்ணப்பிக்க ஜூன் 2–ந்தேதி கடைசி நாள்**



**சென்னை,**

கால்நடை மருத்துவப்படிப்பில் சேர விண்ணப்பம் 12–ந்தேதி முதல் வினியோகிக்கப்பட உள்ளது. விண்ணப்பிக்க ஜூன் 2–ந்தேதி கடைசி நாள்.

<u>கால்நடை மருத்துவப்படிப்பிற்கு விண்ணப்பம்</u>

தமிழ்நாட்டில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரிகளில் கால்நடை மருத்துவம், உணவுத்தொழில்நுட்பம், கோழியின உற்பத்தி தொழில்நுட்ப இளநிலைபட்டப்படிப்புகளில் சேர 12–ந்தேதி முதல் விண்ணப்பம் கொடுக்கப்பட உள்ளது. விண்ணப்பம் அனைத்து வேலை நாட்களிலும் 30–ந்தேதி வரை கொடுக்கப்படும். விண்ணப்பிக்க ஜூன் 2–ந்தேதி கடைசி நாள்.

விண்ணப்ப படிவம், சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரி, மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி ஸ்ரீபுரம் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோவை கால்நடை மருத்துவப்பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை திருப்பரங்குன்றம் கால்நடை மருத்துவப்பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், வேலூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், விழுப்புரம் வி.மருத்தூர் கால்நடைமருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மையம் உள்பட 12 இடங்களில் விண்ணப்பம் கொடுக்கப்பட உள்ளது. விண்ணப்பத்தின் விலை ரூ.600 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.300

<u>ரேங்க் பட்டியல்</u>

அயல்நாடு வாழ் இந்தியர்கள், அயல்நாட்டினர், காஷ்மீரில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள் ஆகியோருக்கு சில இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் விண்ணப்பித்த பிறகு ரேங்க் பட்டியல் ஜூன் மாதம் 3–வது வாரத்தில் வெளியிடப்பட இருக்கிறது. அதன் பின்னர் கலந்தாய்வு நடத்தப்படும்.

இந்த தகவலை தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

**தர்மபுரியில் பட்டுக்கூடு உற்பத்தி அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி**



தர்மபுரியில் பட்டுக்கூடு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

பட்டுக்கூடு விலை உயர்வு

தர்மபுரி நகரின் மைய பகுதியில் அரசு பட்டுக்கூடு அங்காடி இயங்கி வருகிறது. பட்டுக்கூடு விற்பனையில் தமிழகத்தின் முதன்மையான மையமாக இது திகழ்கிறது. தர்மபுரி, சேலம், கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து ஏராள மான பட்டுக்கூடு உற்பத்தி யாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை இங்கு ஏலத்திற்கு கொண்டு வருவது வழக்கம்.

அதன்படி கடந்த சில நாட்களாகவே பட்டுக்கூடுகள் ஏலத்திற்கு அதிக அளவு கொண்டுவரப் படுகின்றன. அதனை கோவை, ஈரோடு, உடுமலைப்பேட்டை, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி உள்ளிட்ட வெளி மாவட்டங் களிலிருந்தும், அண்டை மாநி லமான ஆந்திரா, கர்நாடகா வில் இருந்தும் வியாபாரிகள் வந்து ஏலம் எடுத்து செல் கின்றனர்.

இந்தநிலையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு ரூ.300-க்கு விற்பனையான ஒரு கிலோ எடைகொண்ட வெள்ளை பட்டுக்கூடு நேற்று விலை உயர்ந்து ரூ.484-க்கும், ரூ.300-க்கு குறைவாக விற் பனை செய்யப்பட்ட மஞ்சள் பட்டுக்கூடு ரூ.343-க்கும் ஏலம் விடப்பட்டது.

இதனை வியாபாரிகள் ஆர்வத்துடன் ஏலம் எடுத்து சென்றனர்.

உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி

கடந்த சில மாதங்களாக வறட்சியால் பாதிக்கப்பட்டு வந்த உற்பத்தியாளர்கள் பட்டுக்கூடு விலை உயர்வால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறும் போது:-

கடந்த சில நாட்களாகவே தர்மபுரி பட்டுக்கூடு அங் காடிக்கு அதிக அளவு பட்டுக் கூடுகள் ஏலத்திற்க்காக கொண்டுவரப்படுகிறது. இந்த வருடம் பட்டுக்கூடு அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. மேலும் விலை உயர்ந்தும் உள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள் அதிக மகிழ்ச்சியில் உள்ளோம் என்று கூறினர்.

**கோபி பகுதியில் வீசிய சூறாவளிக்காற்றில் 20 ஆயிரம் வாழைகள் முறிந்து விழுந்தன**



**நம்பியூர்,**

கோபி பகுதியில் வீசிய சூறாவளிக்காற்றில் 20 ஆயிரம் வாழைகள் முறிந்து விழுந்தன.

**<u>200 ஏக்கர் வாழைகள் சேதம்</u>**

கோபி அருகே உள்ள நம்பியூர், குருமந்தூர், கரட்டுப்பாளையம், நடுப்பாளையம், மூலப்பாளையம், காராப்பாடி, நடுப்பாளையம் உள்ளிட்ட பகுதியில் சுமார் 200 ஏக்கரில் விவசாயிகள் நேந்திரம், கதளி, பூவன், ஆந்திர ரஸ்தாளி போன்ற ரக

வாழைகளை பயிரிட்டு இருந்தனர். இந்த வாழைகள் நன்றாக வளர்ச்சி அடைந்து இன்னும் ஒரு மாதத்தில் குலை வெட்டும் நிலையில் இருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நம்பியூர் பகுதியில் காலையில் கடும் வெயில் சுட்டெரிந்தது. இரவு 9 மணிஅளவில் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதனால் பொதுமக்கள் மழை வரும் என எதிர்பார்த்தனர். ஆனால் லேசான தூறலுடன் பலத்த சூறாவளி காற்று வீசியது. இந்த சூறாவளி காற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியமல் சுமார் 200 ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்த சுமார் 20 ஆயிரம் வாழைகள் அடியோடு முறிந்து விழுந்தது. இதனால் விவசாயிகள் பெரும் சேதம் அடைந்தனர்.

**<u>எம்.எல்.ஏ. ஆய்வு</u>**

சேதம் அடைந்த பகுதிகளில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் எம்.எல்.ஏ., கோபி தாசில்தார் துரை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரி கணேசமூர்த்தி ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர். அப்போது விவசாயிகள் எம்.எல்.ஏ.விடம் கூறுகையில் ''தண்ணீர் மற்றும் மின்சாரத்தட்டுப்பாடு ஆகிய சிரமத்திற்கு மத்தியில் இந்த வாழைகளை நாங்கள் வளர்த்து வந்தோம். தற்போது உள்ள சூழ்நிலையில் இந்த வாழைகளை வளர்க்க நாங்கள் பெரும் செலவு செய்துள்ளோம்.

**<u>நஷ்டஈடு வழங்க வேண்டும்</u>**

'இன்னும் ஒரு மாதத்தில் வாழை தார்கள் அனைத்தும் வெட்டுக்கு வந்து விடும். இந்த நிலையில் சூறாவளி காற்றில் அனைத்து வாழைகளும் முறிந்து விட்டன. இதனால் நாங்கள் பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே எங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்றனர்.

அதற்கு எம்.எல்.ஏ கே.ஏ.செங்கோட்டையன்''

குருமந்தூர், கரட்டுப்பாளையம், நடுப்பாளையம், மூலப்பாளையம், காராப்பாடி, நடுப்பாளையம் ஆகிய பகுதிகளில் வாழைகளின் சேதத்தினை முழுமையாக ஆய்வு செய்வோம். பின்னர் அதை மாவட்ட கலெக்டரிடம் வழங்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்போம்'' என்றார்.

**முட்டைகோஸ் சாகுபடியில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள்**



ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதியில் முட்டைகோஸ் பயிர் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. முட்டைகோஸ் பயிரில் தாக்கும் பூச்சிகளை சரியான மேலாண்மை முறையில் கடைபிடிக்காததால் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த முடிவதில்லை. வெப்பத்தை தாங்கும் வீரிய ஒட்டு ரகங்கள் வந்துள்ளதால் அனைத்து பருவங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. இதனால் நோய்களும், பூச்சிகளும் தாக்குதல் அதிகம் உள்ளது.

கோடைகாலத்தில் வைரமுதுகு அந்து பூச்சிகள் கோஸ் பயிரின் உற்பத்தியை குறைக்கிறது. பூச்சி மருந்துகளை அதிகமாக தெளிப்பதால் பூச்சிகளுக்கு எதிர்ப்பு சக்தி ஏற்படுகிறது. மேலும் காய்களில் நஞ்சு தேங்குகிறது. கோஸ் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பல்வேறு விதமான மேலாண்மை முறைகளை இங்கு விளக்கப்பட்டுள்ளது.

<u>வைரமுதுகு அந்து பூச்சி</u>

கோடைகாலங்களில் அதுவும் வெப்பநிலை 32 செல்சியஸ் தாண்டும் போது அதிக அளவில் இந்த பூச்சி பரவுகிறது. முட்டையில் இருந்து வெளிவரும் முதல் பருவ புழுவானது இலைகளில் உள்ள மேல் தோலினை துளைத்துச் சென்று அதன் உட்பகுதியில் உள்ள திசுக்களை உண்ணும். இதனால் இலையில் எண்ணற்ற சிறிய வட்டவடிவிலான துவாரங்கள் காணப்படுகின்றன.

இலைகள் மெல்லியதாக இருந்தால் புழுக்கள் இலைகளின் மேற்புறம் இருந்துகொண்டு சேதத்தினை விளைவிக்கும். இலையின் நடுநரம்பினைத்தவிர

மற்ற எல்லாப் பகுதிகளிலும் பச்சையத்தினை சுரண்டி இலையினை பேப்பர் போல் வெள்ளை நிறமாக மாற்றிவிடும். இதனால் இலைகளில் ஒளிச்சேர்க்கை குறைந்து செடியின் வளர்ச்சி குன்றிவிடுகிறது. பூக்களும் சரிவர பிடிப்பதில்லை, பூவின் எடை குறைந்து காணப்படும். 2 அல்லது 3 நாட்களில் புழு வெளிப்பட்டு இலைகளை தின்று 10 முதல் 14 நாட்களில் கூட்டுப்புழுவாகிறது. 4 முதல் 8 நாட்களில் கூட்டுப்புழு அந்து பூச்சியாக வெளிப்படும். பூச்சியின் கீழ் உள்ள 2 இறக்கையில் வைரம் போன்ற குறி இருப்பதால் இதனை வைரமுதுகு அந்துபூச்சி என்கிறோம்.

பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளை அளவுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பயன்படுத்துவதால் நன்மை செய்யும் பூச்சிகளை, ஒட்டுண்ணிகள் மற்றும் இறைவிழுங்கிகளை அதிக அளவில் அழிக்கப்படுகின்றன. மேலும் புழுக்கள் பூச்சிக்கொல்லிகளின் எதிர்ப்புத் திறன் கொண்டவைகளாக மாறிவிடுகின்றன.

<u>இலைக்கூட்டுப் புழு, தண்டு துளைப்பான்</u>

இந்த பயிரில் அதிகமாக காணப்படுகிறது, இலைகளில் கும்பலாக 40 முதல் 100 முட்டைகள் தென்படும். முட்டையில் இருந்து புழுக்கள் 5 முதல் 7 நாட்களுக்குள் வெளிவந்து இலைகளை உண்பதோடு மட்டுமல்லாமல் பூவில் உள்ளிருந்து உண்ணும்.

கோடைகாலங்களிலும், வறட்சியான நேரங்களிலும் சித்திரை, ஆவணி மாதங்களில் இந்த பூச்சிகள் அதிகமாக காணப்படும். இளம் புழுக்கள் இலை நரம்புகளில் ஒட்டி துளைத்து பெரிய புழுக்கள் தண்டுகளை துளைத்து உண்ணும். இதனால் முட்டைகோஸ் வளர்ச்சி தடைபடுகிறது.

<u>அசுவினி பூச்சிகள்</u>

வெள்ளை பூச்சுடைய அசுவினி கோடை காலங்களிலும் வறட்சியான காலங்களிலும் அதிகமாக காணப்படும். இளம் பூச்சிகள் வெளிறிய மஞ்சள் நிறத்திலும் வளர்ந்த பூச்சிகள் அடர்ந்த பழுப்பு நிறத்திலும் இருக்கும். இந்த பூச்சிகள் செடியின் சாற்றினை உறிஞ்சுவதால் கோஸ்களின் தரத்தினை பாதிக்கிறது. இவை

வெளியேற்றும் தேன் போன்ற திரவ கழிவினால் பாதிக்கப்பட்ட இலைகளின் மேல் கரும்பூஞ்சாணம் படர்ந்து காணப்படும்.

தேர்வு செய்யப்பட்ட விதையினை 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் என்ற உயிர் பூஞ்சானக்கொல்லியினை கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். நடவுக்கு முன் ஒரு லிட்டர் நீருக்கு 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து நாற்றுக்களை நனைத்து நடவு செய்ய வேண்டும். நடவுக்கு பின் ஒரு கிலோ சூடோமோனாஸினை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து பரவலாக தூவுதல் வேண்டும். நாற்று நடவுக்கு முன் ஒரு ஏக்கருக்கு 80 முதல் 100 கிலோ வேப்பம் புண்ணாக்கினை அடியுரமாக இடுதல் வேண்டும்.

ஊடுபயிர்

முட்டைகோஸ் பயிரில் ஊடுபயிராக கடுகு பயிரினை 25 வரிசைக்கு ஒரு வரிசை என்ற விகிதத்தில் பயிர் செய்தல் வேண்டும். இதனால் கடுகு பயிர் 85 முதல் 90 சதவீத அந்து பூச்சியினை கவர்ந்து பூச்சிகளின் தாக்கத்தை குறைக்கும். கடுகு பயிர் பூ பூக்கும் நேரத்தில் அசுவினி பூச்சிகளை கவர்ந்திழுத்து முக்கிய பயிர் முட்டைகோஸினை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும். மேலும் இதனை கட்டுப்படுத்த குயின்னல்பாஸ் 0.2 சதவீதம் அல்லது டைமெத்தோவேட் 0.2 சதவீதம் இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை கடுகு பயிரின் மேல் தெளிக்க வேண்டும்.

ஏக்கருக்கு 1 அல்லது 2 விளக்கு பொறிகளை பொருத்தவும். விளக்கு பொறியின் வெளிச்சத்தில் அந்துப் பூச்சியினை கவரப்படுவதால் பயிர் சேதாரத்தினை கட்டுப்படுத்தலாம். பேசில்லஸ், துரிஞ்சியென்ஸிஸ் என்ற உயிர் பூச்சிக்கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு கிராம் வீதம் கலந்து வாரம் ஒரு முறை தெளிக்கவும். வேப்பம் சோப்பினை 10 லிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் வீதம் 10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கவும். அல்லது வேப்பம் பருப்பு சாற்றினை 4 சதவீதம் கலந்து தெளிக்கவும். மஞ்சள் ஒட்டும் பொறியினை ஏக்கருக்கு 10 என்ற அளவில் வைக்க வேண்டும். முட்டைகோஸ் பயிரில் உள்ள முட்டை குவியல்களை அவ்வப்போது அழிக்க வேண்டும். மேற்கண்ட முட்டைகோஸ் பயிர் சாகுபடி

தொழில்நுட்பத்தை விவசாயிகள் கடைபிடித்து பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாத்து அதிக மகசூல் பெற்று பயனடையலாம்.

இந்த தகவல் மைராடா வேளாண் அறிவியல் நிலையத்தின் தோட்டக்கலை தொழில்நுட்ப அதிகாரி ப.பச்சியப்பன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.85 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 1,816 மூட்டைகளில் 88 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக 103 ரூபாய் 65 காசுக்கும், அதிகபட்ச விலையாக 105 ரூபாய் 60 காசுக்கும் ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக 70 ரூபாய் 15 காசுக்கும், அதிகபட்ச விலையாக 103 ரூபாய் 30 காசுக்கும் ஏலம் விடப்பட்டது. கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.85 லட்சத்துக்கு விற்பனை ஆனது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தை விட இந்த வாரம் கொப்பரை தேங்காயின் விலை 1 ரூபாய் 50 காசு குறைந்து இருந்தது.

**கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு சலுகை விலையில் வைக்கோல் 21 கிலோ ரூ. 2–க்கு விற்கப்படுகிறது**



**கோவை,**

கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு சலுகை விலையில் வைக்கோல் விற்பனை செய்யப்படுகின்றன.

<u>கணக்கெடுக்கும் பணி தீவிரம்</u>

கோவை மாவட்டத்தின் பல பகுதிகளில் நீர்நிலைகள் கடுமையாக வறண்டு காணப்படுகின்றன. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கால்நடைகளுக்கும் போதுமான அளவு தீவனம் கிடைப்பதில் சிக்கல் எழுந்துள்ளது. தற்போது வறட்சி அதிகரித்துள்ளதால் வறட்சியை கணக்கெடுக்கும் பணியையும் மாவட்ட நிர்வாகம் துரிதப்படுத்தியுள்ளது. குறைந்த கால பயிர்களான நிலக்கடலை, சோளம் போன்ற பயிர்கள் எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன? எவ்வளவு ஏக்கர் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன? என்பன போன்ற விவரங்களை மாவட்ட நிர்வாகம் சேகரிக்க தொடங்கியுள்ளது.

சலுகை விலையில் வைக்கோல்

இந்த நிலையில் கால்நடைகளுக்கு சலுகை விலையில் வைக்கோல் விற்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் சூலூர், சுல்தான்பேட்டை, மதுக்கரை, கிணத்துக்கடவு ஆகிய 4 இடங்களில் கால்நடைகளுக்கு சலுகை விலையில் வைக்கோல் விற்கப்பட்டு

வருகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 மாடுகள் வைத்திருந்தால் அவருக்கு 21 கிலோ எடையுள்ள வைக்கோல் ரூ. 2–க்கு விற்கப்பட்டு வருகிறது. இந்த வைக்கோலை வெளி மார்க்கெட்டில் வாங்கினால் ரூ. 7 செலவாகும். விவசாயிகள் வைத்திருக்கும் மாடுகளுக்கேற்றாற் போல வைக்கோலின் அளவு கொடுக்கப்படும்.

வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ஒரு மையத்துக்கு 200 டன் வைக்கோல் வாங்க ரூ. 10 லட்சம் வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.வெளி மாவட்டங்களிலிருந்து வைக்கோல் கொள்முதல் செய்து இங்கு கொண்டு வரப்படுகிறது. இந்த சலுகை விலை வைக்கோலை வேறு பகுதியை சேர்ந்த விவசாயிகளும் வந்து வாங்கிக் கொள்ளலாம் என்றும் விவசாயிகள் இந்த மையங்களை அணுகி சலுகை விலையில் வைக்கோல்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் விவசாயத்துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**



**ஆனைமலை,**

ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.

**<u>ஆழியாறு அணை</u>**

பரம்பிக்குளம்– ஆழியாறு திட்டத்தின் (பி.ஏ.பி.) முக்கிய அணையாக ஆழியாறு அணை விளங்கி வருகிறது. 120 அடி கொள்ளளவு கொண்ட ஆழியாறு அணையில்

சேமிக் கப்படும் தண்ணீர் மூலம் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகள் பயன்பெறுவதுடன், லட்சக் கணக்கான மக்களின் குடிநீர் தேவையும் பூர்த்தியாகிறது. மேலும் கேரளாவுக்கும் தண் ணீர் திறந்து விடப்படுகிறது.

பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆண்டுக்கு 10½ மாதங்கள் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அதே போல் புதிய ஆயக்கட்டு பாசனத்தில் சுமார் 44 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களுக்கு ஒருமடை விட்டு ஒரு மடை என்ற பாசன முறையில் தண்ணீர் ஆழியாறு அணை யில் இருந்து திறந்து விடப்படு கிறது.

<u>**தண்ணீர் திறப்பு**</u>

கடந்த அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை புதிய ஆயக்கட்டு பாசனத் தில் உள்ள ஒரு மண்டல பகுதிக்கு தண்ணீர் வழங்கப் பட்டது. இந்த நிலையில் புதிய ஆயக்கட்டு பாசனப்பகுதியில் உள்ள தென்னை, வாழை, கரும்பு உள்பட பயிர்கள் கடும் வறட்சியினால் தண்ணீர் இன்றி வாடி வந்தன. இதனால் உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து தமிழக அரசு புதிய ஆயக்கட்டு பாசனத்துக் குட்பட்ட 22 ஆயிரத்து 116 ஏக் கர் பாசன நிலங்களுக்கு உயிர் தண்ணீர் திறந்து விட அர சாணை வெளியிட்டது. தொடர்ந்து பொதுப்பணித் துறையினர் நேற்று ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட்டனர்.

இது குறித்து பொதுப்பணித் துறையினர் கூறியதாவது:–

<u>**11 நாட்கள்**</u>

புதிய ஆயக்கட்டு பாசனத் துக்கு ஆழியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. இதில் பொள் ளாச்சி கால்வாய் மூலம் ‘ஏ’ மண்டலத்தில் 11 ஆயிரத்து 616 ஏக்கரும், வேட்டைக்காரன் புதூர் கால்வாயில் ‘பி’ மண் டலத்தில் 5 ஆயிரத்து 623 ஏக்கரும், சேத்துமடை கால் வாயில் ‘ஏ’ மண்டலத்தில் 2 ஆயிரத்து 515 ஏக்கரும், ஆழி யாறு பீடர் கால்வாயில் 2 ஆயிரத்து 362 ஏக்கரும் பயன் பெறும் வகையில் 11 நாட்களுக்கு உயிர் தண்ணீர் திறந்து விடப்படும்.

இதற்காக 4 கால்வாய்கள் மூலம் 400 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் கடந்து ஆண்டு தண் ணீர் கிடைக்காத பாசன நிலங் களில் உள்ள கிணறுகளுக்கு தண்ணீர் கிடைப்பதுடன், நிலத்தடி நீர் மட்டமும் உயர வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**அதிக விளைச்சல் தரும் 'குதிரைமசால் கோ–2' பசுந்தீவனம்**



குதிரைமசால் தீவனப்பயிர்களின் ராணி என்று அழைக்கப்படுகிறது. இது புரதச்சத்து மற்றும் அதிக சுவை கொண்டதாக இருப்பதால் கால்நடைகளால் விரும்பி உண்ணப்படுகிறது. பயறுவகையை சேர்ந்த தீவனப்பயிர்களில் குதிரைமசால் முக்கியமானது. தமிகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, தேனி ஆகிய மாவட்டங்களில் குதிரைமசால் பரவலாக பயிரிடப்பட்டு வருகிறது.

<u>குதிரைமசால் பசுந்தீவனம்</u>

புரதம், வைட்டமின்கள், தாது உப்புக்களான பாஸ்பரஸ், கால்சியம் ஆகியவை காணப்படுவதால், குதிரைமசால் கால்நடை தீவனத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. தானிய, புல்வகை தீவனப்பயிர்களை விட, பயறுவகை தீவனப்பயிர்களின் விளைச்சல் குறைவாக இருப்பினும், கால்நடைகளுக்கு தேவையான சத்துக்கள் அதிகமாக காணப்படுகிறது. இதனால் பயறுவகை தீவனப்பயிர்கள் இயற்கை புரத வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த வகை தீவனப்பயிர்கள் வேர் முடிச்சுகளின் மூலமாக தழைச்சத்தை மண்ணில் நிலை நிறுத்துகின்றன. உலக

அளவில் உள்ள மொத்த கால்நடைகளில் 16 சதவீத கால்நடைகள் இந்தியாவில் உள்ளன. ஆனால் கால்நடைகளின் பால் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாக உள்ளது.

கோ–2 ரகம்

இதற்கு நல்ல சத்துள்ள தரமான பசுந்தீவனங்கள், போதிய அளவில் கிடைக்காததே காரணம். தமிழகத்தில் மொத்த விளை நிலத்தில் 1 லட்சத்து 72 ஆயிரத்து 726 எக்டேர் பரப்பளவில் தீவனப்பயிர்கள் பயிரிடப்படுகின்றன. நிரந்தர மேய்ச்சல் புல் நிலம் 1 லட்சத்து 9 ஆயிரத்து 924 ஆக உள்ளது.

பசுந்தீவனம் தேவையில் 42.6 சதவீதம் பற்றாக்குறை உள்ளது. எனவே இந்த பசுந்தீவன குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றால், அதிக பசுந்தீவன உற்பத்தித்திறன் கொண்ட சத்துள்ள தீவனப்பயிர்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும். இதைக்கருத்தில் கொண்டு மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக, வேளாண் பல்கலைக்கழக தீவனப்பயிர்கள் துறை, குதிரைமசால் கோ–2 என்ற ரகத்தை வெளியிட்டுள்ளது.

கூடுதல் உற்பத்தி

இந்த ரகம் 23.5 சதவீதம் அதிக புரதச்சத்தை கொண்டுள்ளதுடன், அதிக விளைச்சல் தரவல்லது. இதன் உலர் எடை விளைச்சல் எக்டேரில் ஆண்டுக்கு 21.94 டன்கள் ஆகும். மேலும் இதில் நுண்ணூட்டச் சத்துக்களான இரும்பு, துத்தநாகம், தாமிரம் ஆகியவை கோ–1 ரகத்தை காட்டிலும் அதிகமாக உள்ளது.

இதில் அதிக தண்டுகள், மிருதுவான கரும்பச்சை இலைகள், 0.47 சதவீதம் இலைத்தண்டுகள் கொண்டதாக உள்ளன. மேலும், அதிக சுவை கொண்டதாக இருப்பதால், கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், ஆடுகள், ஈமு கோழிகள் ஆகியவை மிகவும் விரும்பு உண்ணக்கூடியதாக உள்ளது. அடர்த்தியாகவும், கொத்துக்கொத்தாகவும் பூக்கும் திறன் கொண்டதால், 18.2 சதவீதம் கூடுதல் விதை உற்பத்தி கிடைக்கிறது.

**தகவல்:- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை.**

**தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வது எப்படி?**



தென்னை, இந்தியாவில் பயிரிடப்படும் தோட்டப்பயிர்களில் முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றைய சூழலில் கொப்பரையின் நிலையற்ற தன்மை, தென்னையை தாக்கும் பூச்சி, நோய்கள் மற்றும் வயதான மரங்களால் ஏற்படும் விளைச்சல் குறைவு, இடுபொருட்களின் விலை உயர்வு தென்னை சாகுபடி செய்வதற்கு பெரும் சவாலாக உள்ளது.

<u>தரமான தென்னங்கன்று</u>

தென்னை நிலைத்து நின்று பலன் தரும் பல்லாண்டு பயிர் என்பதால், தரமான கன்றுகளை தேர்வு செய்து நடவு செய்தால் சிறந்த தென்னந்தோப்பை உருவாக்க முடியும். இதனால் கன்றுகளை தேர்வு செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தரமான கன்றுகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் விவசாயிகளே தங்களுக்கு தேவையான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து கொள்ளலாம்.

இதற்கு முதலில் தரமான தாய்மரங்களை தேர்வு செய்ய வேண்டும். இதன்படி தாய் மரமானது சீராக காய்க்கும் திறன் பெற்றதாக இருக்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகவும், முதிர்வால் காய்க்கும் திறன் குறையாததாகவும் இருக்க வேண்டும்.

ஆண்டுக்கு 80–க்கும் மேற்பட்ட காய்களை மகசூலாக தரும் மரமாக இருக்க வேண்டும். விரிந்த ஓலைகளும், உறுதியான மற்றும் அகலமான அடி மட்டைகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

### மட்டை உரிக்காத தேங்காய்

காய்கள் நடுத்தரமான அளவில் நீள்வட்ட வடிவில் இருக்க வேண்டும். மட்டைகள் உரிக்காத தேங்காயின் எடை 600 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும். கொப்பரையின் எடையானது 150 கிராமிற்கு மேல் இருக்க வேண்டும். தேர்வு செய்த தாய் மரங்களில் இருந்து 11 அல்லது 12 மாத காய்களை தேர்வு செய்ய வேண்டும்.

விதைக்காய்களை அறுவடை செய்வதில் தனி கவனம் செலுத்த வேண்டும். தென்னங்குலைகளை கயிறு கட்டி, கவனமாக மரத்தில் இருந்து இறக்க வேண்டும். விதைக்காய்களை நடவு செய்வதற்கு முன்பாக மட்டைகள் நன்றாக உலர்வதற்கான நிழலில் வைக்க வேண்டும். காய்களில் உள்ள தண்ணீர் வற்றாமல் இருக்க அவற்றை மணலால் மூடி வைக்க வேண்டும்.

### வடிகால் வசதி

விதைக்காய்களின் காம்பு பகுதி மேல்நோக்கி இருக்குமாறு 8 செ.மீ. உயரமுள்ள மணல் படுக்கையை அமைத்து ஒன்றின் மேல் ஒன்றாக 5 அடுக்குகள் வரை சேமிக்கலாம். மணற்பாங்கான நிழல் உள்ள இடங்களில் விதைக்காய்களை சிறிய குவியல்களாகவும் சேமித்து வைக்கலாம். நாற்றங்காலுக்காக தேர்வு செய்யப்படும் இடம் மணற்பாங்கானதாகவும், நல்ல வடிகால் வசதியுடன் இருக்க வேண்டும்.

வடிகால் வசதியற்ற இடங்களில் மேட்டுப்பாத்திகளை அமைக்க வேண்டும். அதிகப்படியான நிழல் இல்லாமல் போதுமான நிழலுடன் இருக்க வேண்டும். திறந்தவெளியாக இருப்பின் நிழல் கூடம் ஏற்படுத்த வேண்டும். வசதிக்கு ஏற்ப 1.5 மீட்டர் நீளம், 75 மீட்டர் அகலம் உள்ள இடைவெளியில் பாத்திகள் அமைக்க வேண்டும்.

### நடவு செய்யலாம்

தென்மேற்கு பருவமழை தொடங்கும் ஜூன்–ஜூலை மாதங்கள் விதைக்காய் நடுவதற்கு ஏற்ற பருவம் ஆகும். எனினும் நீர்ப்பாசனம் வசதியுள்ள இடங்களில் அனைத்து பருவங்களிலும் நடவு செய்யலாம். இடைவெளியை பொறுத்தவரை

பாத்தி ஒன்றுக்கு 4 அல்லது 5 வரிசைகள் வரையிலும், விதைக்காய்களை 30–க்கு 30 என்ற செ.மீ. இடைவெளியிலும் நடவு செய்ய வேண்டும்.

முன்பாக தண்ணீர் இல்லாத அழுகிய கொப்பரை உள்ள விதைக்காய்களை நீக்கி விட வேண்டும். பாத்திகளில் 25–30 செ.மீ. ஆழமுள்ள பள்ளம் தோண்டி, விதைக்காய்களின் மேல்பகுதி சிறிதளவு வெளியில் தெரியும்படி நடவு செய்ய வேண்டும். கிடை மட்டமாகவோ, காம்புப்பகுதி மேல் இருக்குமாறு செங்குத்தாகவோ நடவு செய்யலாம்.

<u>வேலி அமைத்தல்</u>

கோடைக்காலங்களில் போதுமான அளவு நிழல் அளிக்க வேண்டும். மணற்பாங்கான இடங்களில் பருவமழை முடியும் தருணத்தில் நிலப்போர்வை அமைத்து நீர் சேமிப்பு செய்வதுடன் வெப்பத்தின் தாக்கத்தையும் தணிக்க வேண்டும்.

கோடையில் 7 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். தேவைக்கு ஏற்ப களையெடுத்து சுத்தமாக வைக்க வேண்டும். கரையான் தாக்குதல் தென்படும் பகுதிகளில் காய்களை நடுவதற்கு முன் பிப்ரோனில் 2.3 கிராம் அல்லது குளோர்பைரிபாஸ் 3.8 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். நாற்றங்கால் திறந்தவெளியில் இருந்து கால்நடைகளிடம் இருந்து பாதுகாக்க வேலி அமைக்க வேண்டும்.

<u>நடவுக்கு ஏற்ற கன்றுகள்</u>

தகுந்த பருவநிலையின் போது நெட்டை ரக விதைக்காய்கள் நடவு செய்த 11–12 வாரங்களில் முளைக்கத்தொடங்கும். 17–18 வாரங்களில் முளைப்புத்திறன் சதவீதம் உச்சத்தை அடைந்து குறைய தொடங்கும். எனவே முதல் 6 மாதங்களுக்குள் முளைக்காத கன்றுகளையும், குறுத்துகளையும் நாற்றங்காலில் இருந்து நீக்கிவிட வேண்டும்.

அதன்பின்னர் கிடைக்கும் 9–12 மாத கன்றுகளே தோப்பில் நடுவதற்கு ஏற்றவையாகும். விரைந்து முளைக்கும் தன்மை, வேகமான வளர்ச்சி மற்றும்

வீரியத்தன்மை மிகுந்து காணப்படும். 10–12 மாதக்கன்றுகளில் 6–8 இலைகளும், 9 மாதக்கன்றுகளில் 4 இலைகளும் இருக்கும். கன்றுகளின் கழுத்துப்பகுதி 10–12 செ.மீ. சுற்றளவு உடையதாக காணப்படும்.

நிலையான வருமானம்

இவ்வாறு நடவு செய்யப்பட்ட விதைக்காய்களில் இருந்து 60–65 சதவீதம் தரமான கன்றுகள் கிடைக்கும். விரைந்து முளைக்கும் கன்றுகள் வீரியமுடைய தரமான கன்றுகளாக இருக்கும் என்பதால், அவற்றை இனம் கண்டுகொள்ள ஏதுவாக அறுவடை செய்ய வேண்டும். அவற்றை ஒரே நேரத்தில் நடவு செய்ய வேண்டும். தரமான கன்றுகளை விவசாயிகளே உற்பத்தி செய்து கொள்வதால், சிறந்த தென்னந்தோப்பை உருவாக்க முடியும். இதனால் விவசாயிகள் நிலையான வருமானம் பெற முடியும்.

**கோவை வர்த்தக மையத்தில் இலைரக தேயிலை விலை 2 மாதங்களுக்கு பிறகு உயர்வு கிலோவுக்கு 4 ரூபாய் 84 காசு அதிகரிப்பு**



**கோவை,**

கோவை வர்த்தக மையத்தில், இலைரக தேயிலை விலை 2 மாதங்களுக்கு பிறகு உயர்ந்துள்ளது.

இதன்படி கிலோவுக்கு 4 ரூபாய் 84 காசு அதிகரித்து உள்ளது.

தேயிலை வர்த்தக மையம்

கோவை–மேட்டுப்பாளையம் ரோட்டில் தேயிலை வர்த்தக மையம் உள்ளது. இந்த மையத்தில் மின்னணு முறையில் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இதன்படி நடைபெற்ற 17–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–

தேயிலைத்தூள் ரகத்தை பொறுத்தவரை 2 லட்சத்து 57 ஆயிரத்து 523 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 2 லட்சத்து ஆயிரத்து 761 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. இது 78 சதவீதம் ஆகும். 55 ஆயிரத்து 762 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்துள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 90 ரூபாய் 75 காசாக இருந்தது. இது கடந்த வாரம் 87 ரூபாய் 31 காசாக இருந்தது. இதன்மூலம் கிலோவுக்கு 3 ரூபாய் அதிகரித்து உள்ளது. இதன் மொத்த ஏல மதிப்பு ரூ.1 கோடியே 83 லட்சத்து 9 ஆயிரத்து 811 ஆகும்.

2 மாதங்களுக்கு பிறகு விலை உயர்வு

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 21 ஆயிரத்து 420 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 14 ஆயிரத்து 916 கிலோ ஏலம் போனது. இது 95 சதவீதம் ஆகும். 6 ஆயிரத்து 504 கிலோ இலைரக தேயிலை தேக்கம் அடைந்துள்ளது.

ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 76 ரூபாய் 75 காசு ஆகும். இது கடந்த வாரம் 71 ரூபாய் 91 காசாக இருந்தது. 2 மாதங்களுக்கு பிறகு தற்போது விலை உயர்ந்து உள்ளது. இதன்படி கிலோவுக்கு 4 ரூபாய் 84 காசு விலை அதிகரித்து உள்ளது. இதன் விற்பனை மதிப்பு ரூ.88 லட்சத்து 19 ஆயிரத்து 803 ஆகும்.

மதிப்பு எவ்வளவு?

தற்போது நடந்து முடிந்த இந்த ஏலத்தில் 3 லட்சத்து 16 ஆயிரத்து 677 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலை ரக தேயிலை விற்பனை ஆகி உள்ளது. 62 ஆயிரத்து 266 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை தேக்கம் அடைந்து உள்ளது. இந்த ஏலத்தில் ரூ.2 கோடியே 71 லட்சத்து 29 ஆயிரத்து 614–

க்கு வர்த்தகம் நடைபெற்று உள்ளது. இந்த தகவலை தேயிலை விற்பனை மைய(போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்தார்.

**வலங்கைமான் வட்டாரத்தில் கோடை சாகுபடி தீவிரம்**



வலங்கைமான் வட்டார கிராமங்களில் கோடை சாகுபடி தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கோடை சாகுபடி

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வயல் வெளி களையும், ஆறுகளையும் கொண்ட விவசாய பகுதி.

இங்கு நெல், பருத்தி, உளுந்து, சோளம், வாழை, தென்னை, கரும்பு, வெற்றிலை, மலர்- காய்கறி என பல்வேறு சாகு படிகள் ஆண்டுதோறும் நடை பெறும்.

பெரும்பாலான சாகுபடிகள் ஆற்றுப்பாசனத்தை நம்பியே இருந்தாலும், விவசாயிகள் கோடை காலத்தில் ஆற்றில் நீரோட்டம் இல்லாத நேரங்களில் மின்மோட்டார் மூலம் நீர் இறைத்து சாகுபடி பணி களை செய்ய தவறுவதில்லை. இதனால் ஏப்ரல், மே உள் ளிட்ட கோடை கால மாதங் களில் வலங்கைமான் வட்டார கிராமங்களில் கோடை சாகு படி அதிக பரப்பில் நடை பெற்று வருகிறது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:-

ஆழ்குழாய் கிணற்று பாசனம்

வழக்கம்போல் இந்த ஆண்டு குறுவை, சம்பா, தாளடி உள்ளிட்ட பருவ சாகுபடிகள் நீங்கலாக கோடை சாகுபடியில் நெல்லை பயிர் செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம். ஆனால் இந்த முறை கோடை விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளை ஆற்றுபாசனம் கைவிட்டு விட்டது. அதனால் மின்சார மோட்டார்கள், ஆயில் என்ஜின்கள் மூலம் ஆழ்குழாய் கிணற்று நீரை பயன்படுத்தி விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள்.

இந்த ஆண்டு கோடை சாகுபடியில் ஈடுபடும் விவ சாயிகள் சன்ன ரகம் ஏ.டி. டி.43, ஏ.டி.டி.45 ஆகிய வகை நெல் பயிர்களை அதிகம் சாகு படி செய்து வருகிறார்கள். நடவு பணிகள் முடிவடைந்து விட்டன.

கோடை மழை பெய்யுமா?

தற்போது உரம் தெளிக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம். இப்போது கோடை மழை பெய்தால் பயிர்களுக்கும் ஊட்டச்சத்தாக அமையும். அத்துடன் கூடுதல் பலனும் கிடைக்கும். ஆகை யால் விரைவில் கோடை மழை பெய்யும் என்று எதிர் பார்க்கிறோம்.

இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தேவேந்திரன் கூறியதாவது:-

தீவிரம்

வலங்கைமான் வட்டார கிராமங்களில் இந்த ஆண்டு கோடை சாகுபடி தீவிரம் அடைந்துள்ளது. பெரும் பாலும் விவசாயிகள் கோடை சாகுபடியில் ஆழ்குழாய் கிணற்று நீரை பயன்படுத்தியே வயலுக்கு நீர் இறைக் கிறார்கள்.

பல்வேறு பாசன திட்டங்கள் மூலமாக கோடை சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விதைகள், உரம் ஆகியவை மானிய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

கோடை சாகுபடி இந்த ஆண்டு ஆயிரத்து 731 எக்டேரில் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 150 எக்டேர் பரப்பு அதிகமாக கோடை சாகுபடி நடைபெற்றுள்ளது. முன் பட்ட சாகுபடியாக 189 எக்டேர் பரப்பில் குறுவை பயிர் செய்யப்பட்டுள்ளது.

தோட்ட பயிர்கள்

சிகப்புசந்தனம், முள்ளிலா மூங்கில் போன்ற தோட் டக்கலை பயிர்களை கோடை காலத்தில் சாகுபடி செய்வதற்கும் ஊக்குவிக்கப் பட்டு வருகிறது.

இதற்கு தேவையான ஆலோச னைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

**வேப்பூர் அருகே பண்ணை பள்ளி பயிற்சி வகுப்பு**

**வேப்பூர்,**

வேப்பூர் அருகே உள்ள தரிசு கிராமத்தில் மக்காச்சோளம் வயலில் அட்மா திட்டத்தின் கீழ் தாய்குடில் அறக்கட்டளை மூலமாக பண்ணை பள்ளி பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இதற்கு நல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரேமசாந்தி தலைமை தாங்கி, விவசாயிகளிடையே வேளாண் திட்டங்கள் குறித்து எடுத்து கூறி பேசினார்.

வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் வெங்கடலட்சுமி கலந்து கொண்டு பூச்சிநோய் கட்டுப்படுத்துதல் குறித்து பேசினார்.

கூட்டத்தில் தொழில்நுட்ப மேலாளர் தங்கதுரை, வேளாண்மை உதவி அலுவலர்கள் பிரியதர்ஷினி, அட்மா அலுவலர்கள் வெள்ளைச்சாமி, முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வறட்சியான பகுதியில் ரோஜா செடியை பராமரிக்கும் முறை**



**நெல்லை,**

கேள்வி:–

எங்கள் வீட்டில் வளர்த்தும் வரும் வாழைகள் குலைதள்ளும் நிலையில் உள்ளன. ஆனால் அதன் குருத்து இலை திடீர் என்று அழுகி மற்ற இலைகளும் வாடிவிடுகின்றன. அதற்கு காரணம் என்ன?

**சந்தோஷ், கடையம்.**

பதில்:–

நீங்கள் குறிப்பிடும் அறிகுறிகளை பார்க்கும் போது அது வாடல் நோயின் தாக்குதலாக இருக்கக்கூடும். வாடல் நோயானது வாழை குலைதள்ளும் பருவத்தில் மிக அதிக அளவில் குறிப்பாக ரஸ்தாலி, நாட்டு வாழை, நேந்திரன் வாழை போன்ற ரகங்களை தாக்கக்கூடும். வாடல் நோய் தாக்குதலுக்கு முன்பாகவே பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து இருந்தால் மட்டுமே நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும். நோய் முற்றிய நிலையில் அது வாடல் நோயாக இருந்தால் மரத்தை காப்பாற்றுவது மிகவும் கடினம். மண்ணில் அதிக அளவில் நீர் தேங்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். வீட்டு தோட்டத்தில் மேலே குறிப்பிட்ட ரக வாழைகளை சாகுபடி செய்யும் போது வாடல் நோய் தாக்கப்பட்ட தாய் வாழையில் இருந்து எடுக்கப்பட்ட பக்கக்கன்றுகளை எந்த காரணங்கள் கொண்டும் உபயோகிக்கக்கூடாது.

கேள்வி:–

குற்றாலம், பாபநாசம் போன்ற மலை அருகே உள்ள பகுதிகளில் வளர்க்கப்படும் ரோஜா உள்ளிட்ட பூஞ்செடிகளை வாங்கி வந்து வறட்சியான பகுதிகளில் நன்றாக தண்ணீர் ஊற்றி வளர்த்தாலும் சரியாக பூக்காமல் இருப்பது ஏன்?

**<u>ராம் பிரசாத், விளாத்திகுளம்.</u>**

பதில்:–

பொதுவாக ரோஜா செடிகள் அனைத்து விதமான வடிகால் வசதி கொண்ட நிலங்களில் நன்கு வளரும். குறிப்பாக மண்ணிலோ, தண்ணீரிலோ உப்பு தன்மை அதிகம் இருந்தால் செடிகளின் வளர்ச்சி கணிசமாக பாதிக்கும். உங்கள் பகுதியில் தண்ணீர் உப்பாக இருந்தால் ரோஜா செடிகளுக்குமட்டுமாவது நல்ல தண்ணீரோ, நல்ல தண்ணீர் கலந்த போல்வெல் தண்ணீரோ அளித்து சாகுபடி செய்யலாம். பொதுவாக ரோஜா செடிகளுக்கு அதிக அளவில் அங்கக சத்துக்கள் தேவைப்படுவதால் வாய்ப்பு கிடைக்கும் போது எல்லாம் தொழு உரம் அல்லது வேப்பம் புண்ணாக்கு அல்லது மண்புழு உரம் ஆகியவற்றை 3 மாதங்களுக்கு ஒரு முறை இட்டு வரவேண்டும். மாதம் ஒருமுறை இலை வழி மூலம் பஞ்சகாவ்யா மருந்தையும் தெளித்து வந்தால் செடிகள் நன்கு பூக்கும். மேலும் உயிர் உரங்களான அசோஸ்பயிரில்லம், பாஸ்போபாக்டீரியம் ஆகியவற்றையும் தொழுத்து உரத்துடன் கலந்து அவ்வவப்போது கலந்து தெளிக்க வேண்டும்

கேள்வி:–

சுமார் ஒரு ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. அதில் காட்டாமணக்கு பயிர் செய்யலாம் என்று நினைக்கிறேன். எப்போது பயிர் செய்யலாம். அதற்கான விதைகள் எங்கு கிடைக்கும். அறுவடைக்கு பின் எங்கு விற்கலாம்.

**<u>அல்போன்ஸ், மாறாந்தை.</u>**

பதில்:– காட்டாமணக்கு பயிர் செய்வதற்கு முன்பு காட்டாமணக்கு விதைகளை விற்பனை செய்யும் வாய்ப்புகளை அறிந்து கொண்டு சாகுபடியில் ஈடுபடவும். ஏன் என்றால் வெளிச்சந்தைகளின் மற்ற பயிர்களை விற்பது போன்று காட்டாமணக்கு

விதைகளை அதிக அளவில் விற்பனை செய்ய இயலாது. விதைகளை விரும்புகின்ற வியாபாரிகளை முன்பே தொடர்பு கொண்டு அதன் பின்னர் அதற்கு ஏற்றது போல் செய்யவும்.

பதில்களை தொகுத்தவர்:– பேராசிரியர் பா.நயினார்.

**சோழவந்தான், அவனியாபுரம் பகுதிகளில் கோடை மழை: 5 ஆயிரம் வாழை மரங்கள் சாய்ந்தன**



**சோழவந்தான்,**

சோழவந்தான், அவனியாபுரம் பகுதிகளில் கோடை மழைக்கு 5 ஆயிரம் வாழை மரங்கள் வேருடன் சாய்ந்ததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

**வாழை மரங்கள் சாய்ந்தன**

மதுரை மாவட்டம் முழுவதும் கடந்த பல மாதங்களாக மழை இல்லாமல் வறண்டு காணப்பட்டது. பகல் நேரத்தில் கொளுத்திய வெயிலினால் பொதுமக்கள் எங்கும் வெளியே செல்ல முடியாமல் வீட்டிற்குள் முடங்கி கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். வைகை அணை வறண்ட நிலையில் விவசாயிகளும் பணிகளை தொடங்கவில்லை.

வழக்கமாக சோழவந்தான் பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கும் மேலாக வாழை பயிர் செய்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை

காரணமாக கிணற்று பாசனம் மூலம் சுமார் 200 ஏக்கரில் வாழை பயிரிட்டு இருந்தனர். இந்தநிலையில் மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை பலத்த இடி–மின்னலுடன் கோடை மழை கொட்டியது.

அப்போது பலத்த காற்றும் வீசியது. இதனால் சோழவந்தான் பகுதியில் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சாய்ந்தன. இதன்படி ஆண்டியமேடு பகுதியில் தங்கராஜ், பெரியசாமி, சுகுமார், ராமு, சேகர், வீரையா உள்பட 10 பேருக்கு சொந்தமான தோட்டத்தில் இருந்த வாழை மரங்கள் வேருடன் சாய்ந்தன.

## விவசாயிகள் கவலை

இந்த மரங்களில் இருந்த வாழைத்தார்கள் ஒவ்வொன்றும் 8 முதல் 12 சீப்பு காய்களுட்ன் ரூ.150 வரை விலை போகக்கூடிய நிலையில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பகுதியில் மழை காரணமாக வாழை மரங்கள் சேதம் அடைவதால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை நேரில் சென்று ஆய்வு செய்து உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேபோல் உசிலம்பட்டியை அடுத்த கொடிமங்கலம் பகுதியில் சுமார் 200–க்கும் மேற்பட்ட வாழைகள் சாய்ந்து விட்டன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

அவனியாபுரத்திலும் பலத்த சூறாவளி காற்றுடன் பெய்த கோடை மழையால் திருப்பரங்குன்றம் செல்லும் வழியில் உள்ள வாசு என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் இருந்த 100–க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சாய்ந்தன. மேலும் இந்த ஒரு நாள் மழையிலேயே அவனியாபுரம் பகுதியில் உள்ள சாலைகள் குண்டும் குழியுமாக மாறி குளம் போல் காட்சி அளிக்கின்றன. இதனால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பன், கமுதி பகுதியில் மழை**



ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று பாம்பன் மற்றும் கமுதி பகுதியில் நல்ல மழை பெய்தது.

மழை

ராமநாதபுரம் மாவட்டத்தில் சுட்டெரிக்கும் வெயில் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பே அதிக வெயில் அடித்ததால் இந்த ஆண்டு வழக்கத்தை விட கோடைவெயில் கடுமையாக இருக்கும் என்று பொதுமக்கள் அச்சம் கொண் டுள்ளனர். மாவட்டத்தில் நிலவும் கடும் வெப் பத்தை தாங்க முடியாத மக்கள் குளிர்பானங்க ளையும், தர்பூசணி சாற்றையும் அருந்தி ஆறுதல் அடைந்துவருகின்றனர். இந்த நிலையில் மாவட் டத்தில் அவ்வப்போது கருமேகங்கள் சூழ்ந்து கோடைமழை பெய்யும் சூழ்நிலை உருவானாலும் மழைபெய்யவில்லை.

ஆனால் கடந்த சிலநாட்களாக மாவட்டத் தில் கமுதி,ராமநாதபுரம்,ராமேசுவரம் உள்ளிட்ட பகுதிகளில் திடீர் திடீரென மழைபெய்து வருகி றது. நேற்று பாம்பன் மற்றும் குருசடைதீவு உள் ளிட்ட தீவு பகுதிகளில் சுமார் ½ மணி நேரத் துக்கு மேலாக மழைசெய்தது. தீவு பகுதியில் காலை 10.30 மணிக்கு மழைபெய்தது. அதைத் தொடர்ந்து பாம்பனில் 11மணிக்கு மழை பெய்ய ஆரம்பித்தது. இதேபோல கமுதி, அபி ராமம், பார்த்திபனூர் பகுதிகளிலும் சுமார் 1½ மணி நேரம் நல்ல மழை பெய்தது. இதனால் அந்த பகுதி முழுவதும் வெப்பம் நீங்கி குளுமை நில வியது.

**தக்காளி சாகுபடி முறைகள்**



தக்காளி சாகுபடி முறைகள் குறித்து இங்கே காணலாம்.

**<u>தக்காளி சாகுபடி</u>**

தக்காளியை ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம். தக்காளி பயிரிட நல்ல வடிகால் வசதி உள்ள வண்டல் மண் மிகவும் ஏற்றது. மண்ணின் கார தன்மை 6.0– 7.0 என்ற அளவில் இருக்க வேண்டும். வெப்பநிலை 210 முதல் 240 செ.கி வரை இருப்பது இதன் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

ஜூன்– ஜூலை, நவம்பர்– டிசம்பர், பிப்ரவரி– மார்ச் ஆகிய காலங்களில் விதைக்கலாம். அக்டோபர்– நவம்பர், பிப்ரவரி– மார்ச், மே– ஜூன் போன்ற மாதங்களில் நடவு செய்யலாம். எக்டருக்கு 350– 400 கிராம் விதைகள் விதைக்கலாம்.

தக்காளியில், கோ, கோ 2, மருதம் (கோ 3), பி.கே.எம் 1, பூசாரூபி, பையூர் 1, அர்கா அப்ஜித், அர்கா அனான்யா, அர்கா அலோக், அர்கா சிரஸ்டா, அர்கா வர்தன், அர்கா விசால், அர்கா விகாஸ் உள்பட பல்வேறு ரகங்கள் உள்ளன.

ஒரு எக்டருக்குத் தேவையான விதைகளை 40 கிராம் அசோஸ்பைரில்லம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

இவ்வாறு நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை 1 மீட்டர் அகலம் உள்ள மேட்டுப்பாத்திகளில் 10 செ.மீ வரிசை இடைவெளியில் விதைக்க வேண்டும். பிறகு மணல் கொண்டு மூடிவிட வேண்டும்.

<u>பராமரிப்பு</u>

நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். பின்பு பார்கள் அனைத்து 25 நாள் வயதுடைய நாற்றுக்களைப் பார்களின் ஒரு பக்கத்தில் நட வேண்டும். நடுவதற்குமுன் 2 கிலோ அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் கலவையை 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும்.

நாற்று நட்ட 3–வது நாள் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதன்பிறகு மண்ணின் ஈரத்தன்மையைப் பொறுத்து வாரத்திற்கு ஒருமுறை அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

அடிஉரமான எக்டருக்கு தொழு உரம் 25 டன், தழைச்சத்து 75 கிலோ, மணிச்சத்து 100 கிலோ, சாம்பல் சத்து 50 கிலோ, போராக்ஸ் 10 கிலோ மற்றும் துத்தநாக சல்பேட் 50 கிலோ இட வேண்டும். நட்ட 30–வது நாள் தழைச்சத்து 75 கிலோ இட்டு மண் அணைக்க வேண்டும். நாற்று நட்ட 15–வது நாள் ட்ரைகோன்டால் 1 பி.பி.எம் என்ற அளவில் பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதினால் மகசூலை அதிகரிக்க செய்யலாம்.

<u>**பின்செய் நேர்த்தி**</u>

ஒரு லிட்டர் புளுகுளோரலின் மருந்தை 500 லிட்டர் நீரில் நன்றாக கலந்து நாற்று நடுவதற்கு முன்னர் நிலத்தில் தெளித்து நீர்ப்பாய்ச்சி பின்னர் நாற்றுக்களை நடவேண்டும். நாற்று நட்ட 30–வது நாள் ஒரு கைக்கிளை எடுக்க வேண்டும்.

காய்ப்புழு மற்றும் புரொடீனியாப் புழுவைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப் பொறி எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் அமைக்க வேண்டும். தாக்கப்பட்ட பழங்களைப் பறித்து அழிக்கவேண்டும். வளர்ந்த புழுக்களையும் அழிக்க வேண்டும். ஒரு எக்டருக்கு எண்டோசல்பான் 35 இசி 2 மில்லி, ஒரு லிட்டர் தண்ணீர் அல்லது கார்பரில் நனையும் தூள் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

காய்ப்புழுவிற்கு என்.பி.வி. வைரஸ் கலவை தெளிக்க வேண்டும். புரொடீனியாப் புழுவுக்கு எக்டருக்கு கார்பரில் 1.25 கிலோ, நெல் தவிடு 12.5 கிலோ, வெல்லம்

1.25 கிலோ மற்றும் தண்ணீர் 7.5 லிட்டர் கலந்து விஷ உணவு தயாரித்து உபயோகப்படுத்த வேண்டும். வேர் முடிச்சு நூற்புழு தடுக்க கார்போபியூரான் குருணை மருந்தை ஒரு சதுர மீட்டருக்கு 10 கிராம் என்ற அளவில் விதைக்கும் போது இட வேண்டும்.

**நோய்கள்**

விதைப்பதற்கு 24 மணி நேரம் முன்பு விதைகளை ட்ரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் ஒரு கிலோ விதைக்கு அல்லது கேப்டான் 2 கிராம் ஒரு கிலோ விதைக்கு என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். நாற்றாங்காலில் நீர் தேங்கக்கூடாது. காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து மருந்தை பாத்திகளில் ஊற்ற வேண்டும். இதன் மூலம் நாற்று அழுகல் நோயை தடுக்கலாம்.

இலைச்சுருட்டு நச்சுயிரி நோய் தக்காளி செடியை தாக்கும் முதன்மை நோயாகும். இந்த நச்சுயிரி வெண் ஈக்கள் மூலமாகப் பரவுகிறது. வெயில் காலங்களில் மிகவும் அதிகமாக இருக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த எக்டருக்கு மெத்தில் டெமட்டான் அல்லது மோனோகுரோட்டோபஸ் அல்லது டைமீத்டோயேட் 500 மில்லி ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

இலைப்பேன்கள் தக்காளியில் புள்ளி வாடல் நோயியை பரப்பும் காரணியாக செயல்படுகிறது. இந்த நோயினால் தாக்கப்பட்ட செடிகளை முதலில் அகற்றிவிட வேண்டும். இலைப்பேன்களை கட்டுப்படுத்த எக்டருக்கு 7 கிலோ ப்யூரடான் குறுணையை இட வேண்டும்.

**அறுவடை**

இந்த முறைகள் பின்பற்றி நிறைவான மகசூல் பெறலாம். சாரிசரியாக 135 நாட்களில் ஒரு எக்டருக்கு 35 டன் பழங்கள் வரை பெற்று பயனடையலாம்.

**குமரி மாவட்டத்தில் மழை: இரணியலில் 57 மி.மீட்டர் பதிவு**



**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இரணியலில் அதிகபட்சமாக 57 மி.மீட்டர் மழை பதிவானது.

**குமரியில் மழை**

குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. நாகர்கோவிலில் நேற்று காலையில் வெயில் அடித்தது. அதன்பிறகு வானம் மப்பும் மந்தாரமுமாக மாறியது. மதியம் 1 மணி அளவில் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை ஒரு மணி நேரத்துக்கு மேல் நீடித்தது.

இதே போல் மார்த்தாண்டம், பேச்சிப்பாறை உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்தது.

**57 மி.மீட்டர் பதிவு**

குமரி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவில், அதிகபட்சமாக இரணியலில் 57 மி.மீட்டர் மழை பதிவானது. மற்ற பகுதிகளில் பெய்த மழையின் அளவு மி.மீட்டரில் வருமாறு:–

நாகர்கோவில் 48, திற்பரப்பு 44.6, கோழிப்போர்விளை 32, ஆனைக்கிடங்கு 29, பூதப்பாண்டி 27.5, சுருளோடு 18.3, அடையாமடை 18, கன்னிமார் 13.4, குளச்சல் 13.2, பாலமோர் 4.3, முள்ளங்கினாவிளை 4, ஆரல்வாய்மொழி 2, புத்தன்அணை 1.

**<u>அணைக்கு நீர்வரத்து</u>**

இந்த மழையின் காரணமாக பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 196 கனஅடி தண்ணீர் வருகிறது. பெருஞ்சாணி அணைக்கு 19 கனஅடி தண்ணீர் வருகிறது. சிற்றாறு–1 அணைக்கு 26 கனஅடியும், சிற்றாறு–2 அணைக்கு 42 கனஅடியும் தண்ணீர் வருகிறது.

இதனால் அணையின் நீர்மட்டமும் ஓரளவு உயர்ந்து வருகிறது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் நேற்று 15.85 அடியாகவும், பெருஞ்சாணி 37.25 அடியாகவும் இருந்தது.